REGISTERED AS A CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 14 விலை ரூபா 5 15 ஆகஸ்ட் –30 ஆகஸ்ட் 1998

### ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி

தீவகப்பகுதி கைப்பற்றுகையின் பொழுது (1990இல்) அகால மரணமடைந்த மக்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 22-08-98 திங்கள் அன்று நாரந்தனை திரு இருதய நாதர் ஆலயத்தில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆன்மாக்களுக்காக விஷேட வேண்டுதல் செய்யப்பட்டது. திருப்பலி முடிந்த பின் மக்கள் கல்லறைக்குச் சென்று அவர்களது கல்லறைகளின் முன் கண்ணீர் சிந்தியகாட்சி யாவரினதும் மனதை உருக்கியது.

*தகவல் - சாந்தி*

# இடம் பெயர்வு துன்ப அனுபவங்கள் விசுவாசத்தை ஆழமாக்கி உள்ளன

★ *யாழ். நகரில் செபமாலைத் தாசர் சபை சிரேஸ்ரர் அருள்திரு M. L. அலோசியஸ்* ★

செபமாலைத்தாசர் சபையின் சிரேஸ்ரர் M.L. அலோசியஸ் அடிகள் அண்மையில் யாழ் நகருக்கு விஜயம் செய்தார். இந்திய நாட்டைச் சார்ந்தவரான இவர், இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள செபமாலைத் தாசர் சபையின் சிரேஸ்ரராக ஏறக்குறைய கடந்த 15 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றார். தமது சபையின் வளர்ச்சியிலும், பணியிலும் அதிக அக்கறை கொண்டுள்ள அலோசியஸ் அடிகள் இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் அதிக கரிசனையும் ஈடுபாடும் கொண்ட ஒருவராவார்.

இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்த வேளையிலும் பல தடவைகள் யாழ் நகருக்கு வருகைதந்து தமது சபையையும் தமிழ் மக்களின் நிலையையும்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## அருள் ஆச்சிரமத்திற்கு அதிக இளைஞர்கள் வந்துபோவதைக் காணக்கூடியதாக உள்ளது

–சிரேஸ்ரர் எம். எல். அலோசியஸ் அடிகள்.

செபமாலைத்தாசர் சபையின் சிரேஸ்ரர் எம்.எல் அலோசியஸ் அடிகள் அண்மையில் யாழ் நகருக்கு விஜயம் செய்தபோது அருள் ஆச்சிரமத்தில் தங்கி இருந்தார். ஆவணி 17இல் அருள் ஆச்சிரம்த்தில் நன்றித் திருப்பலி ஒன்றை நிறைவேற்றிய பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அருள் ஆச்சிரமத்தில் கடந்த சில நாட்களாகத் தங்கியிருந்தேன். மாலை நற்கருணை வழிபாடுகளிலும் காலைத்திருப்பலியிலும் பங்குபற்றியுள்ளேன். இப்போது அதிக இளைஞர்கள் வருவதை என்னால் கவனிக்கக்கூடியதாக உள்ளது. வழிபாடுகளிலும் பங்கு பற்றுகிறார்கள். அமைதியான வேளைகளில், மாலைப் பொழுதுகளில் அவர்கள் வந்து தனிமையாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இது மிகவும் கவனிக்கப்படவும் பாராட்டப்படவும் வேண்டிய விடயமாகும். இவர்கள் இவ்வாறு வருவதில் இங்கு தங்கியுள்ள பிரான்சீஸ் அடிகள் பெரும் பங்காற்றியிருக்கவேண்டும். அவருக்கு எனது பாராட்டு என்று தெரிவித்தார்.

### சிறுவர் கலைக்கூடம்
(Children's Theatre)

சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை உன்னதமான முறையில் பேணவும், ஏனைய தாக்கங்களிலிருந்து அவர்களை கலை வழியாலும், கண்ணியமான வழி நடத்தலாலும் பாதுகாக்கவும், 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான சிறுவர்கலைக்கூடம் திருமறைக்கலாமன்றத்தில் வரும் செப்டெம்பர் மாதத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

பெற்றோர்கள் திருமறைக்கலா மன்றத்துடன் தொடர்பு கொள்ளவும்.




சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்திருவிழா–புரட்டாதி 24ஆம் திகதி

## யாழ் நகருக்கு அன்னை திரேசாவின் சபையினர் வருகை

எதிர்வரும் புரட்டாதி மாதத்தில் மறைந்த அன்னை திரேசாவின் சபையினர் தம்முடைய வழமையான பணிகளை . ஆரம்பிப்பதற்காக யாழ் நகருக்கு வருகை தரவுள்ளனர். ஒய்வு பெற்ற யாழ் ஆயர் அன்னை திரேசாவின் சபையினரை யாழ் நகரில் வந்து பணியாற்றும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார். 15 செப். – 15 ஒக். 1997 பாதுகாவலனில் இக் கடிதத்தை பிரசுரித்திருந்தோம். அவ் வேண்டுகோளை பணியாளர்களுடைய தொகை கருதி ஏற்றுக் கொள்ளமுடியாது என அப்போது அன்னை திரேசா மறுப்புத் தெரிவித்திருந்தார்.

கடந்த மாதத்தில் அன்னை திரேசாவின் அன்புப் பணியாளர் சபையின் இலங்கை பாகிஸ்தான் நாடுகளுக்கான சபைத் தலைவி அருள்சகோதரி றெஜீன் அவர்களும், அருள் சகோதரி யூவாண்ட் அவர்களும் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் அழைப்பினை ஏற்று யாழ் வருகை தந்திருந்தனர். அந்த வருகையின் முடிவாகவே அன்னை திரேசாவின் அன்புப் பணியாளர்கள் தம் வழமையான பணிக்காக யாழ் வரவுள்ளனர். தொடரும் போரினால் பாதிப்படைந்திருக்கும் எமது பிரதேசத்திற்கு இவர்களின் அன்புப் பணி பெரிதும் உதவியாக இருக்கும்.

தமது சபை அங்கத்தினர் பற்றாக்குறையாக இருந்த போதிலும் எமது மக்களுக்காக அன்புப் பணியாற்ற வருகை தரவிருக்கும் அன்புப் பணியாளர்களை யாழ் திருச்சபையும் இறைமக்களும் மகிழ்வுடன் வரவேற்கும் இந்நேரத்தில் பாதுகாவலன் அன்பு நெஞ்சங்கள் சார்பிலும் இவர்களை வரவேற்று பணி சிறக்க வாழ்த்தி நிற்கிறோம்.

## செபமாலைக் கன்னியரின் பொன்விழா

செபமாலைக் கன்னியர் தமது சபையின் 50 ஆண்டுகள் நிறைவை அச்சுவேலி அமலிவனம் மடத்தில் புரட்டாதி திங்கள் 15ஆம் நாள் நன்றிவிழாவாகக் கொண்டாடவுள்ளனர். யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நன்றித்திருப்பலியைத் தலைமைதாங்கி இக்கன்னியரின்சபை தொடர்ந்து வளரவும் வளம் பெறவும் இறையாசி வேண்டுவார்.

இந்த நன்றிப் பெருவிழாவில் யாழ் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்துக் குருக்கள், கன்னியர்கள், குருமாணவர்கள், அன்பர்கள், நண்பர்கள், உபகாரிகள் அனைவரையும் கலந்து

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி . பா. 127– 1)

பாதுகாவலன்

# செபமாலைக் கன்னியரின் பொன்விழா மகிழ்வினிலே . . .

செபமாலைக் கன்னியர் தமது சபையின் பொன்விழாவை நன்றிப்பெருக்கோடு கொண்டாடுகிறார்கள். அவர்களின் இப்பொன்விழா பற்றிய அறிவித்தல் 15 புரட்டாதி – 15 ஐப்பசி 1997 பாதுகாவலன் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

50 ஆண்டுகள் – அரை நூற்றாண்டு ஒரு சிறிய காலப்பகுதியல்ல. இவர்களின் கடந்த கால வாழ்வுக்காகவும் பணிக்காகவும் நாம் முதற் கண் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்.

யாழ் ஆயர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் சார்பாக இறை ஆசீர்மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

மேலைத் தேய மறைபரப்பாளர்கள் ஆசிய மண்ணிற்கு வந்து பணிபுரிந்த வேளையில் யாழ் மண்ணின் மைந்தனும் அமலமரித்தியாகிகள் சபைத் தியாகியுமாகிய B.A தோமஸ் அடிகள் எம் மண்ணின் மைந்தரை வைத்து ஆரம்பித்த சபையே செபமாலைத் தாசர் சபையாகும்.

1928ஆம் ஆண்டு செபமாலைத் தாசர் சபை ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகளின் பின்னர் 1948 இல் செபமாலைக் கன்னியர் சபை உருவாக்கப்பட்டது. இலங்கையிலும்,இந் தியாவிலும் இச்சபைகள் வளர்ந்து பரந்துள்ளன. ஒரே நிறுவுனரால் ஒரே நோக்கத்தோடும், பணித்திட்டத்தோடும் செபமாலைத் தாசர்சபையும் செபமாலைக் கன்னியர்சபையும் உருவாக்கப்பட்டாலும் இரு சபையினரும் இன்று வெவ்வேறு தலைவர்களின் கீழ் தனித்துவமும்,முழுமையும் பெற்ற சபைகளாகத் திகழ்கின்றன.

செபமாலைத் தாசர்சபையின் சிரேஸ்ரர் அருள்திரு M.L அலோசியஸ் அடிகள் அண்மையில் யாழ் நகருக்கு விஜயம் செய்த போது செபமாலைக் கன்னியர் சபையின் இல்லங்களுக்கும் சென்று தம் ஆசிர்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

தமது இந்த சகோதர விஜயத்தின் பின்னர் இவர்கள் நிறுவுனரின் நோக்கத்தை இன்னும் அச்சொட்டாகப் பின்பற்றி வருகிறார்கள் என்று பாராட்டியுள்ளார். இடம் பெயர்வு அனுபவங்கள் இவர்களுடைய வாழ்க்கை முறையைப் பெரிதும் குழப்பி இருந்தாலும் மனோதிடத்தோடு இறை சித்தத்தை இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்கள்.

எமது மண்ணில் நடைபெறும் யுத்த அனர்த் தங்கள் மத்தியில் தோலகட்டி தாய் மடத்தையும், முக்கிய உருவாக்க இல்லமாகிய அமலிவன மடத்தையும் இவர்கள் இழந்த போதும் இடம்பெயர்வில் இவர்கள் தம் இடத்தைவிட்டு முகமாலைக்கும் கிளிநொச்சிக்கும் அலைந்து திரிந்த போதும் இவர்கள் தமது செபத்தின் வல்லமையையும் இறை சித்தத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கையும் தெளிவாக நிரூபித்துள்ளார்கள்.

சபையின் மடங்கள் ஒவ்வொரு மறை மாவட்டத்திலும் நிறுவப்பட்டு, இரவு பகல் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, ஆயர் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆக்கமும் ஆசீரும் பெறத்தக்க விதமாக இச்சபையினர் செபிக்க வேண்டும் என்பது நிறுவுனரின் விருப்பமாகும்.

இந்த நிறுவுனரின் விருப்பத்தை இவர்கள் நிறைவுசெய்ய முன்வரவேண்டுமென இத்தருணத்தில் அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது மண்ணிலேயே இருந்து உருவாகிய இந்தத் தியான சபை அமைதியையும் தியானத்தையும் இன்று தேடுவோரின் தேவையைக் கவனத்தில் கொண்டு இன்றும் அனேகமானவர்களைத் தம் பணிக்கு அழைத்துக்கொள்ளவும் நற்கருணை நாதர் முன் எம் மறைமாவட்டத்திற்கும் குறிப்பாக எமது தமிழ் மண்ணிற்கும் வரம் வேண்டி ஆசிகளை அள்ளிப் பொழிய வேண்டுமென ஆசிக்கின்றோம்.

# செபமாலைத் துறவியின் வாழ்வும் பணியும்

அமலமரித்தியாகிகள் இலங்கை மண்ணில் கால் பதித்த 150வது ஆண்டு ஜுபிலி யாழ் மறை மாவட்டத்தில் இவ் வருடம் கொண்டாடப்பட்டது. அவர்கள் தூய நோக்குடன் ஆர்வமாக வேகமாகப் பணிபுரிபவர்கள் என்ற சிறப்புப் பண்பு பலராலும் எடுத்துக்காட்டப்பட்டு பாராட்டப்பட்டது. அமல மரித்தியாகியான தந்தை தோமஸ் அடிகளாரிடம் இப்பண்பு எவ்விதம் நன்கு மிளிர்ந்துள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

தோமஸ் அடிகள் தூரப்பார்வை கொண்டவர் மட்டுமல்ல இறை உறவில், இறை அறிவில் உயரத்தே பறந்து, மனித உண்மைகளை ஆழத்தே நோக்கினார். இதுவே இவரை ஒரு தியானயோகி ஆக்கியது. தம் சமுதாயத்தினது நாடித்துடிப்பை துல்லியமாய் கணக்கிட்டு, நோயை அறிந்து மருந்தையும் கண்டுபிடித்து, பரியரியாகிப் பரிகாரியானார். இறையரசைப் பரப்பும் தனது ஆர்வத்தை இவர் இத்தகைய திசையில் திருப்பியதன் விளைவே செபமாலைத் துறவியர் சபை ஆகும்.

அன்றைய சமூகப் பிரச்சினைகளைப் பகுத்தாய்ந்து அங்கு காணப்பட்ட பொருளாதார சமூக ஏற்றத் தாழ்வையும் இறையுணர்வின்மையையும் இறையரசுக்கு மாறான சமூக பாவமாகக் கண்டார். இதற்கு எதிர் சாட்சியமாக இறையரசின் நோக்கங்களையும், மதிப்பீடு களையும் இறையுணர்வுகளையும்கொண்ட ஒரு சிறு மாதிரிச் சமூகத்தை உருவாக்கி துறவறக் குழுமமாக்கினார்.

இறைமகிமை, மனித மாண்பு, சமத்துவ சகோதரத்துவ உறவு, உரியவருக்கு உரிய உரிமை என்ற மதிப்பீடுகளினாலான இக்குழுமம், தன் சாட்சியத்தால் சமுதாயத்தில் ஒரு தூண்டுகோலாக விளங்க வைத்தார். அதற்கு ஏற்றவாறு ஏழைத் தொழிலாளவர்க்கத்தோடு சமத்துவம் பாராட்டும் தொழில் முயற்சிகளில் துறவியரும் ஏழைகளும் சமபங்கெடுக்கும் உழைப்பை முன்வைத்தார். 24 மணி நேரமும் மக்கள் சார்பாக கிறிஸ்துவுடனும் மரியன்னையுடனும் இணைந்து இறைவன் முன் ஒரு துறவி எப்போதும் பரிந்துரைப்புப் பணியில் ஈடுபட வைத்தார். படைப்புக்களாகவும், பலவீனராகவும் கடவுளின் மக்களாகவும் மானிட சமுதாயம் முழுவதையும் உலகளாவிய உணர்வில் அகத்தே ஈர்த்துக்கொண்ட தியான யோகியானார். இறைவனுக்குரிய உரிமை, மனிதருக்குரிய உரிமை, படைப்புக்களுக்குரிய உரிமை என்ற திறந்த பரந்த பார்வையில் அவரது ஆன்மீகம் நெறிப்பட்டது. இது ஒரு பிரபஞ்ச உறவை அவரில் தோற்றுவித்தது. ஆம் உண்மையில் ஒரு தியானியின் வெளிப் படையான உறவுகள் எவ்வளவு மட்டுப்படுத்தப்பட்டதாயிருப்பினும், உள்ளார்ந்த உறவுக்குப் பஞ்சமே இல்லை. இத்தகைய உண்மையான ஆழமான உறவைத் தொடர்ந்து வளர்த்துக்கொள்வதற்காகவே வெளிப் படையான உறவுகள் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட மடவாச உள்ளிருப்பு முறைக்குள் ஈர்த்துக்கொண்டன.

தந்தை தோமஸ் அடிகளை மக்கள் ஓர் எளிய இறை அடியாராகக் கண்டார்கள். காரணம் அவரிடம் விளங்கிய மிகச் சிறந்த பண்பாகிய தாழ்மையாகும். தமது தியானத்தின் ஊடாக இறைவன் யார்?, யான் யார்? என்ற சூபருண்மைக்குள் ஊடறுத்துச்சென்று இறைவன் மனிதன் என்ற உண்மைகளைக் கடந்து தெளிந்தமையின் விளைவே அவரிடம் விளங்கிய தாழ்ச்சி. இவ்வுண்மை அறிவும் தாழ்மையும் தனி மனிதனை மனுக்குலத்தை இறைவன் எவ்வாறு நோக்குகிறாரோ அவ்வாறே தோமஸ் அடிகளையும் நோக்க வைத்தது. எனவேதான் சபையின் குடும்பப் பண்பாகவும், இறைவனோடும் தன்னோடும் பிறரோடும் கொள்ளும் உறவின் மூலப் பண்பாகவும் தாழ்ச்சியை முன்வைத்தார். இதில் இருந்து பிறந்தவையே அவர் கண்டுணர்ந்த உயர் மதிப்பீடுகளான இறை மகிமை, மனித மாண்பு, சமத்துவ சகோதரத்துவ உறவு, உரியவருக்கு உரிய உரிமை. இம் மதிப்பீடுகளையே செயலில் நிஜப்படுத்த துணிந்தார். இம்மதிப்பீடுகளே இன்றும் எமது தியானயோகத்திற்கும் பணிக்குமதளம் இடுபவை. அதாவது

- “இறைவனுக்கு நிகர் யார்” என்ற இறை மகிமை.
- இறைபுகழ் ஆராதனை, இறை உறவுக்கு முதலிடம்.
- பாவ ஈர்ப்பு கொண்ட மனிதர் என்ற நிலையிலும், கடவுளின் மக்கள் என்ற உணர்விலும் மக்களோடு பாகுபாடற்ற உள்ளார்ந்த
- கிறீஸ்துவின் பாவப்பரிகரிப்பின் வழி யாவரும் மன்னிப்படைந்து விடுதலை பெற உரிமையுடையவர்களாதலால் மக்கள் சார்பாக தியாக அர்ப்பணிப்பு.
- சகோதரத்துவ உறவில் மக்களின் உணர்வுகளை இறைமுன் தாங்கி நிற்றல்.
- பயிர்ச்செய்கை கால்நடைவளர்ப்பு, சிறுகைத் தொழில் முயற்சிகள் மூலம் படைப்பை விருத்தி செய்தலில் வசதி குறைந்தோரின் வாழ்வை முன்னேற்றல். (போரினாலும், பொருளாதார நெருக்கடிகளினாலும் யாழ் மடங்களில் இவை மிகப் பாதிப்படைந்துள்ளன)

இவ்வாறு எம் ஸ்தாபகர் குறிப்பிட்ட வாழ்க்கை நெறியூடாக ஆன்மீக சமூக மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டிருந்தார். அவரைப் பின்பற்றி காலம் விடுக்கும் செய்திகளைப் பகுத்தறிந்து இன்றைய சமுதாயங்களில் உள்ள பரவலான ஆழமான பாவ நோய்களைக் கண்டு ணர்ந்து தந்தையவர்கள் முன்வைத்த உயர் மதிப்பீடு களிற்கேற்பவும், திருச்சபையில் தியான யோக வாழ்க்கை முறையை தழுவிய வண்ணமும் பரிகாரப் பணியாளராக அதாவது சமூகப் பாவத்திற்கு எதிர் சாட்சியம் கொடுப்போராக எம்மை மீளவும் மாதிரிச் சமூகமாக புனரமைத்துக்கொண்டு சமுதாயத்திற்கு தூண்டுகோலாக இருக்கும் மிகச் சவால் நிறைந்த பணி எம்முன் காத்து நிற்கிறது.

## சிறுவர் உரிமைகள் சமவாயம் பற்றிய கருத்தரங்கு

யாழ் மனித முன்னேற்ற நடுநிலைய ஏற்பாட்டில் கடந்த 25-08-98 அன்று காலை யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் சிறுவர் உரிமைகள் சமவாயம் பற்றிய கருத்தரங்கு நடாத்தப்பட்டது. காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வினை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் J.P.E. செல்வராஜா அடிகளார் உரைவழங்கி தொடக்கி வைத்தார். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் C.G. ஜெயக்குமார் அடிகளாரும் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து நிகழ்வினை சிறுவர் பாதுகாப்பு நிலைய இணைப்பாளர் திருமதி ஜெனோவா அல்பிரட்டும் உதவியாக செல்வி உமா சங்கரலிங்கமும், திரு தற்பரன் அவர்களும் சிறுவர்கள் உரிமைகள் விழிப்புணர்வு நிகழ்வினை நடத்தினர்.

இதில் சிறுவர் உரிமைகள் சம்பந்தமாக ஐ.நா வின் 41 சரத்துகள் பற்றி விளக்கம் கொடுக்கப்பட்டு இன்றைய நிலையில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. இது பற்றி மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் காவலனுக்கு கருத்து தெரிவிக்கையில் நாட்டில் தற்போது நிகழும் யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களில் குரல் கொடுக்க முடியாதவர்களே சிறுவர்களும் ஆவர். எனவே இவர்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் பேணும் நோக்கில் மக்கள் மத்தியில் சிறுவர் உரிமை விடயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ் மறைக்கோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு வெகு விரைவில் பருத்தித்துறை, இளவாலை மறைக்கோட்டங்களிலும் நடத்தப்படும் எனத் தெரிவித்தார். (இந் நிகழ்வு சம்பந்தமான புகைப்படங்கள் கீழே)






பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேசம்

குடும்ப அரங்கம் 04

# பகிர்ந்து வாழும் குடும்பம்

இக் குடும்பத்திலே அணைக்க ஒரு தாய். அன்பு தந்து வழி நடத்த ஒரு தந்தை. ஊறு துணையாக இருக்க உடன் பிறந்தோர் போன்றோர் முக்கிய கதாபாத்திரங்களாகும். இதன் படி இவர்களுக்கிடையே அன்பு வளர்க்கப் பட்டு அதன் மூலம் இறையன்பை உணர்ந்தவர்களாய் செயற்பட இக் குடும்பம் அன்பின் கருவூலமாகின்றது.

அன்பின் கருவூலமாகத் திகழும் இக் குடும்பத்திலே தன்னை ஒரு பெண்ணிற்கு கொடுப்பதன் மூலம் ஒரு ஆண் கணவனாகின்றான். தன்னை ஒரு ஆணிற்கு கொடுத்து ஒரு பெண் மனைவியாகிறாள். பின் குழந்தைகளுக்கு தம்மைக் கொடுப்பதன் மூலம் இருவரும் பெற்றோர் ஆக வேண்டும். என்னும் அன்புப் பகிர்வின் மூலம் இறைவனால் படைக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட இக்குடும்பத்திலே அன்பு அணைகட்டப்படாது, அடிமைச்சங்கிலியால் பிணைக்கப்படாது அவ் அணையாச்சுடர் வரம்பு கடந்து வளர வேண்டும் என்பது அவ்சியமாகும். இவ்வரம்பு கடந்த அன்பின் பின்னணியைக் கொண்டு இன்றைய சமுதாயத்திலே வாழுகின்ற குடும்பங்களை நோக்கின், அன்பெனும் தீபம் அணைக்கப்பட்டு, வாழ்வின் அர்த்தம் காணாது நடைப்பிணங்களாக இக் குடும்பமெனும் குட்டித் திருச்சபை காணக்கிடக்கிறது. அதாவது இன்றைய குடும்பங்களிலே பகைமைகள் பிறக்கின்றன. பாசங்கள் சாகின்றன. கொடுமைகள் குன்றுபோல் குவிக்கப் படுகின்றன. கண்ணீர் வெள்ளம் கடல் நீராய்ப் பெருக்கெடுத்து ஓட கணவனுக்கும், மனைவிக்கும் இடையே துலங்கவேண்டிய திருமண உறவு, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே நிலவவேண்டிய பாசப் பிணைப்பு தகர்க்கப்படுகின்றன பிறரால் சீரும் சிறப்பாக நடைபெற வேண்டிய வாழ்க்கை பிறர் கைகொட்டி எள்ளி நகையாடும் சர்க்கஸ் நிகழ்ச்சிகளாகிவிட்டன. ஒருவனுக்கு ஒருத்தி எனும் தத்துவத்தை தரணி யெங்கும் தவழவிட்டுத் தன் வாழ்வில் தடைகள் பல வரினும் தகர்த்தெறிந்து தன் மானத்துடன் வாழத்துடித்து மலர் ஒன்றை மணந்தவர்கள் கூட மலர் விட்டு மலர் தேடும் வண்டுகளாகி விட்டனர்.

இன்பத்திலும் துன்பத் திலும், உடல்நலத்திலும் நோயிலும் உனக்குப் பிரமாணிக்கமாய் வாழ்வேன் என இறை முன்னிலையில் வாக்குக் கொடுத்தவர்கள் பொய்யர்களாகின்றார்கள். இவைகளெல்லாம் ஏன் இன்று எம் குடும்பங்களிலே தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன? ஆம் இவற்றிற்கெல்லாம் காரணம் மனைவி தன்னை கணவனுக்கும் கணவன் தன்னை மனைவிக்கும் இருவரும் தம்மை பிள்ளைகளுக்கும் கொடுப்பதன் மூலம் உருவாகும். இக் குடும்பத்திலே அன்பு கொடுபடவில்லை, பகிரப்படவில்லை என்பதே அடிப்படையாக உள்ளது.

தமது உள்ளத்தின் கதவுகளைத் திறந்து விட உரிமையில்லை. கனவிலும், கற்பனையிலும், நினைவிலும், நிழலிலும் வாடும் நிலைகள், அடக்கு முறைகள் ஆணவச் செருக்குகள், ஆங்காங்கே ஒலிக்கும் அழுகுரல்கள் இவையெல்லாம் குடும்பத்தில் அன்பின் அஸ்தமிப்பை அரங்கேற்கிறது.

இந்நிலையற்ற இறைவனின் அன்பினால் உருவாக்கப்பட்ட இக் குடும்பத்திலே அதிகாரமிட்டாலோ, ஆணவச் செருக்கோ இடம் பெறாது அன்பு பகிரப்படல் வேண்டும். இவ் அன்புப் பகிர்வானது குடும்பங்களிலே அந்தரங்கங்கள் அம்பலப்படுத்தப் படாது. சந்தேகங்கள் சஞ்சரிக்காது. ஒருவரையொருவர் ஏற்று வாழும்போது வரம்புகடந்த ஒன்றாகத் திகழ்கின்றது. குடும்பத்திலே அனைத்து அங்கத்தவர்களிடையேயும் சம உரிமை, சம அந்தஸ்து சமபகிர்வு போன்ற ஜனநாயக முறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு சுயநலமற்ற, தன்னலமற்ற மனப்பாங்கு குடும்பம் எனும் கட்டடத்தைத் தாங்கி நிற்கும் முக்கிய தூணாக விளங்குவது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு சுயநலமற்ற தன்னலமற்ற நிலை உருவாகும் பொழுது குடும்பத்திலே அமைதியும், ஆனந்தமும் நிறைந்து அன்பெனும் தீபம் ஏற்றி வைக்கப்பட்டு பிரகாசிக்கின்றது. இந் நிலையில் அங்கே அன்பு நிறைந்த நல்லதொரு குடும்பம் உருவாகின்றது. அதாவது

1. குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களுக்கிடையே ஒற்றுமை காணப்படல்
2. பெற்றோர்கள் அன்பிலும், பண்பிலும் சிறந்து விளங்குதல்
3. பிள்ளைகளின் சொல், செயல், நடை என்பன ஒருவர் ஒருவருக்கு ஒருவருக்கிடையே வேறுபட்டுக் காணப்படும். இத் தன்மைகளைப் பெற்றோர் இலகுவில் இனம் கண்டு அதற்கேற்ப பழகி அவற்றில் திருத்த வேண்டியவற்றை அன்பினால் திருத்தி மன்னிப்பு வழங்க வேண்டும்.
4. பெற்றோர்கள் பொதுவான விடயங்களை அக்கறையோடு பிள்ளைகளுடன் கலந்துபேசி முடிவெடுத்தல், உரையாடல், மனம் விட்டுப் பேசுதல் போன்றவற்றால் பிள்ளைகள், பெற்றோருக்கு அஞ்சாது தம் கருத்துக்களை மனம் விட்டுப்பேச வாய்ப்புக் கிடைக்கும்.
5. சிறு பராயத்திலிருந்தே குழந்தைகளிடம் பாரபட்சம் காட்டாது உறவாடி அவர்களை அன்பு, நீதி, நேர்மை, தாழ்ச்சி, பொறுமை போன்றவற்றில் காலடி எடுத்து வைக்கக் கற்றுக் கொடுத்தல் போன்ற காரணங்களின் மூலம் குடும்பத்திலே அன்பு வளர்க்கப்பட்டு அது அணைகடந்து செயற்பட வழிவகுக்கின்றது.

இவ்வாறு அன்புப் பிணைப்பு தகர்க்கப்படாத நிலையிலேயுள்ள குடும்பத்திலே இவ் அன்பு மேலும் வளர்க்கப்பட்டு வரம்பு மீறியதாக உருவாகும் போது தான் குடும்பம் கோவிலாகிறது. இதன் படி கணவன் மனைவிக்கிடையே இவ் வரம்பு கடந்த அன்பினை நோக்கின் "நீ முன்னே நடந்தால் நான் உன்னை இழந்துவிடக்கூடும். நீ என் பின்னே நடந்தால் நான் உன்னை மறந்துவிடக் கூடும். எனவே என் கண்ணே என்னுடன் சரிசமமாக நடந்துவா". இது தன் மனைவிக்கு சமவுரிமை கொடுக்கும் வரம்பு கடந்த அன்புடைய கணவனின் கனிவான குரல்.

(வளரும்)

## செப்டெம்பர் மாத திருவழிபாட்டு நாட்காட்டி

| திகதி | வாசகம் | பதிலுரை | வாசகம் | நற்செய்தி | திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | 1கொரி.2:10–16 | தி.பா.145:8–14 | | லூக்.4:31–37 | 1 |
| 2 | 1கொரி.3:1–9 | தி.பா.33:12–15,20–21 | | லூக்.4:38–44 | 2 |
| 3 | 1கொரி.3:18–23 | தி.பா.24:1–6 | | லூக்.5:1–11 | 3 |
| 4 | 1கொரி.4:1–5 | தி.பா.37:3–6,27–28,39–40 | | லூக்.5:33–39 | 4 |
| 5 | 1கொரி 4:6–15 | தி.பா145:17–21 | | லூக்.6:1–5 | 5 |
| 6 | சா.ஞா.9:13–19 | தி.பா.90:3–6,12–14,17 | பில 9–10,12–17 | லூக்.14:25–33 | 6 |
| 7 | 1கொரி.5:1–8 | தி.பா.5:4–6 | | லூக்.6:6–11 | 7 |
| 8 | மிக்.5:2–5 | தி.பா.13:5 | | மத்.1:1–16,18–25 | 8 |
| 9 | 1கொரி 7:25–31 | தி.பா.45:10–11,13–16 | | லூக்.6:20–26 | 9 |
| 10 | 1கொரி.8:1–7,11–13 | தி.பா.139:1–3,13–14,23–24 | | லூக்.6:27–38 | 10 |
| 11 | 1கொரி. 9:16–19,22–27 | தி.பா.84:2–5,11 | | லூக்.6:39–42 | 11 |
| 12 | 1கொரி. 10: 14–22 | தி.பா.116:3–4,8–9 | | லூக்.6:43–49 | 12 |
| 13 | வி.ப. 32:7–11,13–14 | தி.பா.51:1–2,10–11,15–17 | 1திமோ1:12–17 | லூக்.15:1–32 | 13 |
| 14 | எண். 21:4–9 | தி.பா78:1–2,34–35,36–38 | பிலி2:6–11 | யோவா.3:13–17 | 14 |
| 15 | எபி. 5:7–9 | தி.பா.31:1–5,14–15,19–20 | | யோவா.19:25–27 | 15 |
| 16 | 1கொரி.12:31,13:13 | தி.பா.33:2–5,12,22 | | லூக்.7:31–35 | 16 |
| 17 | 1கொரி. 15:1–11 | தி.பா.118:1–2,16–17,28 | | லூக்.7:36–50 | 17 |
| 18 | 1கொரி. 15:12–20 | தி.பா.16:1,6–8,15 | | லூக்.8:1–3 | 18 |
| 19 | 1கொரி.15:35–37,42–49 | தி.பா.56:9–13 | | லூக்.8:4–15 | 19 |
| 20 | ஆமோ. 8:4–7 | தி.பா.113:1–8 | 1திமோ.2:1–8 | லூக்.16:1–13 | 20 |
| 21 | எபே.4:1–7,11–13 | தி.பா.19:1–4 | | மத்.9:9–13 | 21 |
| 22 | நீ.மொ. 21:1–6,10–13 | தி.பா.119:1,27,30,34,35,44 | | லூக்.8:19–21 | 22 |
| 23 | நீ.மொ. 30:5–9 | தி.பா.119:29,72,89,101,104,163 | | லூக்.9:1–6 | 23 |
| 24 | ச.உ. 1:2–11 | தி.பா90:3–6,12–14,17 | | லூக்.9:7–9 | 24 |
| 25 | ச.உ.3:1–11 | தி.பா.144:1–4 | | லூக்.9:18–22 | 25 |
| 26 | ச.உ.11:9,12:8 | தி.பா.90:3–6,12–14,17 | | லூக்.9:44–45 | 26 |
| 27 | ஆமோ.5:1,4–7 | தி.பா.146:7–10 | 1திமோ.6:11–16 | லூக்.16:19–31 | 27 |
| 28 | யோபு 1:6–22 | தி.பா.17:1–3,6–7 | | லூக்:9:46–50 | 28 |
| 29 | தி.வெ12:7–12 | தி.பா.138:1–5 | | யோவா.1:47–51 | 29 |
| 30 | திமோ. 3:14–17 | தி.பா.119:9–14 | | மத்.13:47–52 | 30 |

## நற்செய்தித் தூண்டுதல் போட்டி இல. 04 விடைகளும் பரிசு பெற்றோர் விபரமும்

மாற்கு 6–13 அதிகாரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கா (1) | ல் | ந | டை | யா | க | ■ | நே (2) |
| ம (3) | றை | நூ | ல் | அ (4) | றி | ஞ | ர் |
| வெ (5) | ளி | வே (6) | ட | த் | தை | ■ | மா |
| றி | ■ | ளை | ■ | ழி | ■ | நி (7) | றா |
| ■ | உ (8) | யு | ப (9) | ம | கொ (10) | லை | க |
| எ | ண் | ம் | ஞ் | ர | ர் | வா | ■ |
| லி | மை | ■ | ச | ம் | பா | ழ் | மோ |
| யா | யை | ■ | ம் | ■ | ன் | வை | சே |

### பரிசு பெற்றோர்

1. செல்வி. எமிலியானா
121, திருக்குடும்ப மாகாண இல்லம்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2. செல்வி. M.M. ஆனந்தராஜா
"பிறேமஸ்ரன்", நெல்லியடி,
கரவெட்டி.

3. கோமதி மகேஸ்வரன்
797, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

S. நியூமன்
220.1/6 பிறின்ஸ்
ஒவ் வேல்ஸ் அவின்யு,
கொழும்பு.14

வருக தூய ஆவியே வருக எங்கள் நெஞ்சிலே

# செபமாலைக் கன்னியர் சபையின் ...

## ஆயர் பேசுகிறார்



செபமாலைக் கன்னியர் சபையானது அமல மரித் தியாகிகளுள் ஒருவரான வண. தோமஸ் அடிகளார் மூலம் ஈழநாட்டில் ஏற்ப டுத்தப்பட்டு, எம் நாட்டை செப அருளால் அழகுசெய்யும் அரும்பெரும் கொடையாக அமைகின்றது.

பற்பல சபைகள் மேல் நாடுகளில் இருந்துவந்து எம் நாட்டில் வேரூன்றினா லும் எமது நாட்டில் உருவான சுதேசி களைக்கொண்டு ஆரம்பித்த சுதேச தியா னயோகசபை இது ஒன்றே.

லூர்துபதியிலும், பத்திமா பதியிலும் அன்னை விடுத்த வேண்டுகோளுக்கிணங்க 11ம் பத்திநாதர் பாப்பரசர் விடுத்த "தேனும் இக்னேசியே" என்ற சுற்றுமடலின் வலியுறுத்தலுக்கும், அன்றைய யாழ் ஆயர் கியோமர் ஆண்டகையின் விருப்பத்திற்கும் ஏற்ப தொடங்கியது இத்துறவறசபை.

இச்சபையானது இலங்கையிலும், இந்தியாவிலும் பல கிளை களைப் பரப்பித் தன் பரிகார வாழ்வின் மூலம் முழுத்திருச்சபையின் புனிதத்துவத்திற்கும், மெருகூட்டுகின்றது என்றால் அது மிகையா காது. இவர்கள் தம் மறைந்த வாழ்வின் மூலம், ஆன்மீக, சமூக, பொருளாதார சீர்கேடுகளில் நின்று மனித சமுதாயத்தை விடுவிக்க ஆசித்த சபை நிறுவுனரின் கருத்தை நிறைவு செய்கின்றார்கள். செபமாலையை ஆயுதமாகவும், தவ முயற்சிகளை போர்க்கருவிகளா கவும் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய வாழ்க்கை முறை மனித சக்திக்கு அப்பாற்பட்டது. தொடர்பான செபமும் வன்மையான தவமும் பொருந்திய இவ்வாழ்வை இவர்கள் வாழ்வது மனித சமுதாயத்திற்குப் பெருமைதரும் ஒரு செயலாக அமைகின்றது. போரி னாலும், இடம்பெயர்வுகளினாலும் இவர்கள் பல இன்னல்களை அனுபவித்தாலும், சபையின் வளர்ச்சிக்காக முயற்சித்துக்கொண்டே இருக்கின்றார்கள். இவர்கள் எடுக்கும் முயற்சிகள் தக்க பலனளிக்கவும், சபை ஸ்தாபகரின் விருப்பங்களை நிறைவு செய்வ தற்கும், நல்ல அழைத்தல்களைப் பெற்று இலங்கையிலும், இந்தியா விலும் எல்லா மறை மாவட்டங்களிலும் கிளை பரப்பி மக்கள் மத் தியில் செபதப வாழ்விற்கு ஊக்கமளிக்கவும் எல்லாம் வல்ல இறை வன் அருள்பாலிப்பாராக.

இறைவன் இச்சபையினரை ஆசீர்வதித்து இவர்கள் தம் நோக்கத்தை நன்முறையில் செயற்படுத்த ஊட்டம் அளிப்பாராக.

+ பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

### அழைப்பு

செபமாலைக் கன்னியர் சபையின் 50வது யூபிலி விழாத் திருப்பலி

இலங்கை திருநாட்டிலே ஈழமண்ணிலே, யாழ் மாவட்டத்தி லுள்ள வசாவிளான் என்னும் கிராமத்திலே, உள்ள தோல கட்டி என்னும் இடத்தில் தந்தை தவத்திரு வ.அ. தாமஸ் அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட செபமாலைக் கன்னியர் சபையின் 50வது யூபிலிவிழா நன்றித் திருப்பலி, அச்சு வேலியில் உள்ள அமலிவனம் மடத்தில், புரட்டாதி திங்கள் 12ம் நாள் சனிக்கிழமை, நடைபெற இருப்பதால், யாழ் மறைவாட்டத்தில். உள்ள அனைத்து குருக்கள், கன்னியர்கள், குருமாணவர்கள், அன்பர்கள் நண்பர்கள், உபகாரிகள் அனைவரையும், இந்நன்றித் திருப்பலியில் எம்முடன் இணைந்து, இறைவனை மகிமைப்படுத்த அன்புடன் அழைக்கின்றோம். —நன்றி—

*அருள்சகோதரி மேரி மில்றட்*

### கடந்துவந்த பாதையில் பதித்துவந்த தடங்கள்

| | | |
|---|---|---|
| 1948 | புரட்டாதி 08 | தாய்இல்லம் வசாவிளான் ஆரம்பம்-யாழ் |
| 1954 | ஐப்பசி 07 | தூத்துக்குடி -வடக்கன்குளம் பிசர் தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டது. |
| 1957 | வைகாசி 13 | தேவத்தை - கொழும்பு மறைமாவட்டம் |
| 1963 | புரட்டாதி 29 | திருவனந்தபுரம் - கேரள |
| 1967 | புரட்டாதி 08 | அச்சுவேலி -யாழ் மறை |
| 1972 | புரட்டாதி 08 | மன்னார் மறை மாவட்டம் |
| 1974 | புரட்டாதி 08 | தலவில்லு - புத்தளம் |
| 1974 | புரட்டாதி 08 | பெரிய பாளையம்- சென்னை |
| 1977 | புரட்டாதி 08 | றாவத்தை நல்லூர் -சென்னை |
| 1983 | புரட்டாதி 08 | திருச்சி |
| 1984 | புரட்டாதி 08 | ஜெபல்பூர் மத்திய பிரதேசம் |
| 1990 | புரட்டாதி 08 | பங்களூர் - கர்நாடகாப் பிரதேசம் |
| 1992 | புரட்டாதி 08 | சோளங்கந்தை - கண்டி மறைவட்டம் |
| 1995 | தை 09 | உருத்திரபுரம் மூடப்பட்டது |
| 1997 | ஐப்பசி 07 | துவன - நீர்கொழும்பு மறைவட்டம் |

## செபமாலைத் தாசர் (கன்னியர்) சபை நிறுவ...



திருச்சபை நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருக் கிறது. மிகவும் பிரமாணிக்கமும் தற்பரித் தியாகமும் நிறைந்த மறைபரப்பாளர்கள் இருக்கின்றனர். பங்குத்தளங்கள் செழிப் புற்று வளர்கின்றன. கல்வி அறிவு புகட்டு தல் மூலம் பெருமளவு நன்மைகள் ஆற்றப் பட்டன. இருந்த போதிலும் கிறீஸ்தவ வாழ்க்கைத்தரமும் உறவு நிலைகளும் அன்றாட வாழ்வில் பலவீனம் அடைந்துள் ளன. சமுதாய வாழ்வில் வேறுபாடுகள், பிரிவினைகள் எழுந்தன. இறை மறுப்புக் கொள்கைகள் மிக வேக மாக வளர்ந்துள்ளன. இவற்றை எதிர்க்க நாம் சக்தி அற்றவர்களாய் இருப்பது போல் தோன்றுகின்றது. இதற்கு ஏதோ ஒன்று தேவையாக உள்ளது.

தோலகட்டி றோசேரியன் ஆச்சிரமத்தில் கடந்த 40களின் இறுதிப் பகுதிகளில் நான் ஒரு இளம் குருவாக அருள்தந்தை பி.ஏ, தோமஸ் அடிகளாருடைய வழிநடாத்தலின் கீழ் ஞானத் தியானம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தபோது அவருடைய உரை யாடலில் இழை ஓடியவைகளே அந்த வசனங்கள்.

யாழ் மறை மாவட்டம் அதி.வந். கென்றி (ஜுலேன்) அ.ம.தி. அவர்களின் வழிநடத்தலின்கீழ் கத்தோலிக்க திருச்சபை செழித்து வளர்ந்து வந்த காலத்திலும் வாழ்ந்தவர் அருள்தந்தை தோமஸ் ஏக காலத்தில் வாழ்ந்த பெரிய மறைபரப்பாளராக அருள்தந்தை ஞானப் பிரகாசியார் அ.ம.தி, சிறந்த கல்விமானாக அருள்தந்தை எஸ். ஆசீர்வாதம் அ.ம.தி. அருங்கொடை இயக்கப் போதகரான மார்சலின் அ.ம.தி. இவர்களைப் போல அருள்தந்தை தோமஸ் அடிகளாரும் ஆர்வமிக்க சுதேச குருவாவார்.

அருள்திரு தோமஸ் அ.ம.தி. அடிகளார் தமது குருத்துவப் பணியை, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியராகவும் இருந்து மாணவர் விடுதி மேற்பார்வை யாளராகவும் ஆரம்பித்தார்.

இளைஞர்களோடு, சிறப்பாக விடுதியில் அவரது நேரடிக் கண்காணிப்பில் இருந்த இளைஞர்களோடும், கத்தோலிக்கரும், இந்துக்களுமான, பெற்றோருடனும் இவருக்கிருந்த தொடர்பு மூலமும் சமுதாயத்தில் திருச்சபையின் தாக்கம் பற்றி அவரது தனிப்பட்ட மீளாய்வு மூலமும், அவரது சொந்த ஆன்மீக அனுபவம் ஆழம் பெற்றது. படைப்பவரும் பாதுகாப்பவருமான இறைவன் மேல் அவருக் கிருந்த விசுவாசமும், தெய்வீகப் பராமரிப்பால் மனிதனின் முழுமை யான தங்கியிருப்பு பற்றிய மறைபரப்பு முயற்சிகளுக்கு ஈடாக செப தெய்வானுபவதியான வாழ்வில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் களுடைய வாழ்வும் சாட்சியமும் மிகவும் அவசியம் என்னும் ஓர் உறுதிப்பாட்டை அவருள் வளர்த்தது.

இதே காலகட்டத்தில்தான் மறைபரப்பு நாடுகளின் தந்தை என்றழைக்கப்படும் பரிசுத்த தந்தை பதினோராம் பத்திநாதர் தமது சுற்றுமடல் மூலம் மறைபரப்பு பணியாளர்களின் முயற்சிகளுக்கு உதவியாக இருக்கும்படி சுதேச தெய்வானுபவதியான வாழ்வு வாழும் துறவற சபைகளை நிறுவ ஊக்கமூட்டும்படி மறைபரப்பு நாடுகளின் ஆயர்களைக் கேட் டுக்கொண்டார்.

மேலும் இந்தத் தருணத்தில்தான் பத்திமா அன்னையின் காட்சியும், செய்தியும் உலகெங்கும் பரவியது. இந்த நிகழ்வுகள் அருள்தந்தை தோமஸ் அடிகள் தம் உள்ளத்தில் ஆவலோடு வளர்த்து வந்த உறுதிப்பாடுகளுக்கும் ஆசைகளுக்கும் ஓர் செயல் வடிவம் கொடுக்க அவரைத்தூண்டியது.

எனவே அவர் தனது திட்டத்தை அப்போதைய யாழ் ஆய ருக்கு திடமனத்தோடு வெளிப்படுத்தினார்.

ஆயரின் அனுமதியோடும், தூண்டுதலோடும் அருள்திரு தோமஸ் அடிகள் செபமாலைத்தாசர் ஆச்சிரமத்தை தோலகட்டியில் ஆரம்பித்தார். அவரது வழிநடாத்த... டைய திட்டத்தை ஆர்வத்தோடு ஏ... ஞர் குழு ஒன்றைத் தம்முடன் அழை...

கிறிஸ்தவ சமூக உறவுக்கு... கும் படியாகவும் சமுதாய வேறுபா... கரிப்பு செலுத்தும்படியாகவும் அ... இளைஞர்களை சமுதாயத்தில் எ... தெடுத்தார். எனவே சகோதரத்துவ... வேறுபாட்டையும் தம்மிடையே தவி... போதும் வலியுறுத்துவார்.

அவர்களது வாழ்வை செப... களை தியானிப்பதிலும் மையப்படு... தவர்கள் நற்கருணை முன் செபிப்... பட்டனர். திருப்புகழ் மாலையைப் ... பாகக் கொண்டாடுவதும் தியான... செபித்து செய்யப்படும் நற்கருண... நாளாந்த வாழ்வில் முக்கிய இடம் ... யின் போது அங்கத்தவர்கள் இரவ... முறையெடுத்து திருவிழிப்புச் செய்... ஆச்சிரமத்தை அப்போஸ்தல பணி... மின்சக்தி நிலையம்" எனக் குறிப்பி...

வாழ்வில் உடல் உழைப்பை ... புடன் ஏற்று சாட்சியம் பகிரும்படி நா... குறிப்பிடக்கூடிய அளவு நேரம் பல்... கைப்பணிகளுக்கென கொடுக்கப்ப... மடத்தின் தேவைகளை நிறைவு செ... வேலைகள், நிலத்தைப் பண்படுத்... மிருகவளர்ப்பு, பல்வேறு வகையான ... பத்திகள் போன்ற குழுமத்தினதும் ... தாயத்தினதும் தேவைகளை நி... செய்யும் வேலைகள் என்பவற்றி... கொடுக்கப்பட்டது. இந்த வேலைகளி... பங்குகொண்டு வாழ்வுக்குத் தேவை... கொள்ள வாய்ப்புக் கொடுப்பதோடு, ... கியமான மனநிலையை வளர்த்துக்... படுவார்கள். வேலைத்தளங்களில் ... விக்கப்பட்டு காப்பாற்றப்பட்டது.

கீழைத்தேச தப முறைகளை... களிடையே நிலவிய சில தப்பெண்... அருள்தந்தை தோமஸ் சத்துநிறை... செய்து வலியுறுத்தினார்.

இப்புதிய வாழ்க்கைமுறை ... பட்ட முறையில் குழவாகவும் ஈர்த்து... பங்குகொள்வதற்கும், பார்வைக்கு இடுவ... கபட்டனர். இவர்கள் நல்ல முறையி... குறிப்பிட்ட ஒரு அங்கத்தினரால் ... இடங்களையும் சுற்றிக் காண்பிக்க... லும் வேலைகளிலும் ஈடுபட்டிருப்போ... பெறும்.

இந்தக் குழுமம் மறைபரப்ப... களுக்காகவும், விஷேட செப உதவி ... வழி நடத்தப்பட்டனர். ஆனால் அவ... ஏகாந்தத்தில் வாழப்பட்டது.

செபமாலைத்தாசருடைய வ... தாலும், காலப்போக்கில் அதே வா... களையும் கொண்டு பெண்களுக்கும் ...

## எமது சக்தி வாய்ந்த செப அப்போஸ்தலத்துவம்

நான்கு சுவர்களுக்குள் மறைந்து வாழ்வது உலகினரால் மடமையாக் கருதப்படுகின்றது. கிறிஸ்துவுக்காக மடையரானோம் என்பதில் இச்சபையினரான நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இவர்கள் என்ன செய்கிறார்கள், இவர்களால் திருச்சபைக்கு என்ன பயன் என்பதே எம்மைப்பற்றி மக்கள் எழுப்பும் கேள்வி. செபத்தின் வல்லமையை அறிந்துணர்ந்தவர்களுக்கு மாத்திரமே இவ்வாழ் வின் பயன் விளங்கும். பார்வைக்கு மறைந்திருக்கும் மின்சாரத்தின் சக்திதான் அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்கிறது. செபத்தின் மறைவான ஆற்றல் எத்தகையது என்பதை விளக்க ஒரு துறவறக் கன்னிகையின் கதை கூறப்படுகின்றது.

ஒரு மாணவன் தன் உயர் படிப்பை முடித்துக் கொண்டு குருமடத்திற்குச் செல்ல ஆயத் தமான போது அவனுக்குப் பல இடங்களிலும் பிரியாவிடை நடத்த ஆடல்பாடல்களில் மயங்கி தன் அழைப்பில் தத்தளித்திருந்த போது ஒரு கனவு, தனக்காக ஒரு துறவறக்கன்னிகை செபிப்பதைக் கண்டான். உடனே அறிவு தெளிந்து குருமடம் சென்று படித்து ஒரு உத்தம குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். பின் சில வருடங்களில் ஆயர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். தன் மறைமாவட்டத்தில் இருக்கும் கன்னியர் மடமொன்றிற்கு திருப்பலி நிறைவேற்றச் சென்றிருந்தார். துறவியருக்குத் திருவிருந்து கொடுக்கும் போது ஒரு அதிர்ச்சி, அன்றொருநாள் தான் கனவில் கண்ட சகோதரியை அங்கு கண்டார் ஆயர். திருப்பலி முடிந்தபின் துறவியரைச் சந்தித்தார். அந்தக் குறிப்பிட்ட சகோத ரியை பார்த்து உமது செபங்களை என்ன நோக்கத்திற்காக ஒப்புக்கொடுக்கிறீர் என்று கேட்டார். நல்ல குருத்துவ அழைத்தல்களுக்காக என பதில் வந்தது. எனக்காகத் தொடர்ந்து மன்றாடும்படி கேட்டு சகோதரியை ஆசீர்வதித்தார் ஆயர்.

எவ்வாறு எமது செபதபம் உலகின் எத்திசைக்கும் சென்று ஆன்மாக்களைத் தொடுகிறது என நாம் அறியோம். ஆனால் தொடர்ந்து எல்லோருக்காகவும் செபித்துக்கொண்டிருப்பதே எம் இறைபணி. அது தேவையுள்ளவர்களைச் சென்று சேரும் என்பது எம் மன உறுதி. இந்த அடைபட்ட செபவாழ்வின் இனிமையை உலகில் உள்ள மக்கள் அறிவார்களானால் மதில்களால் ஏறிக்குதித்து மடத்துக்குள் வந்து விடுவார்கள்." எனப் புனித அவிலா திரேசாள் கூறுகிறாள்."

செ...

செபமாலை... நி...வில் ... லும் உண்... களின் கட... கிறோம். இ... வழியாக ந...

இ... இன்னும் ... இடம்பெயர்... யை பெரி... இறை சித்... கள் தங்க... உதவிய ... யினருக்கு ... தொடர்ந்து... பவும் அ... உளமார்ந்த...

# ...பொன்விழா சிறப்பிதழ்

1948 - 1998 ★

## ...பட்டதன் இலட்சியமும் நோக்கமும்

...ர் கீழ் இருந்தவர்களும் அவரு
...க்கொண்டவர்களுமான இளை
...சென்றார்.
...ரு நேரடியாகச் சாட்சியமளிக்
...ளுக்கு இறைவன் முன் பரி
...தம்மோடு அழைத்துச்சென்ற
... நிலையில் இருந்தும் தேர்ந்
...ழ்வைப் பாதிக்கும் எந்தவொரு
...தமாறு அங்கத்தவர்களை எப்

...லும் மீட்பின் மறை உண்மை
...ம்படியாக குழுவின் அங்கத்
...லும் புகழ்வதிலும் ஈடுபடுத்தப்
...வதும், திருப்பலியைச் சிறப்
...மன நிலையில் செபமாலை
... ஆராதனையும் அவர்கள்
...க்கின்றன. இந்த ஆராதனை
...கலும் நற்கருணைநாதர்முன்
...ள். எனவே தந்தை தோமஸ்
...ர்களுக்கு சக்தி வழங்கும் "
...ார்.



...அயலில் உள்ள ஏழை மக்கள்
...ன வருமானத்தை பெற்றுக்
...கத்தொழில் பற்றிய ஆரோக்
...ாள்ளவும் கற்றுக்கொடுக்கப்
...ள, செப, சூழ்நிலை ஊக்கு

...ஊக்குவிக்கும்படியும் இந்துக்
...ங்களை எதிர்க்கும் படியும்
...க்கறி உணவை அறிமுகம்

...குவிரைவில் பலதை தனிப்
...கொண்டது. வழிபாடுகளில்
...விருந்தினர்கள் வரவேற்
...வரவேற்கப்பட்டு அதற்கென
...டத்தையும் வேலை செய்யும்
...வார்கள். ஆனால் செபத்தி
... குழப்பாதவாறு இது நடை

...பணியாளர்களின் தேவை
...போருக்காகவும் செபத்திற்கு
...து வாழ்வு ஆச்சிரமத்தின்

...பு ஆண்களுடன் ஆரம்பித்
...கை முறையையும் ஒழுங்கு
...படுத்தப்பட்டது. தெய்வனுபவ

வாழ்வு மட அடைப்புக்குள் வாழப்பட வேண்டியது நிறுவுனர் மட அடைப்பைப் பற்றி பேசியும் எழுதியும் இருக்கிறார். வழக்கமாக அத்தியாவசியமான தேவைகளில் அன்றி அங்கத்தினர் மடத்தின் எல்லையைக் கடக்க மாட்டார்கள் .

மேற்கு நாடுகளின் பல ஆச்சிரமங்களை சிறப்பாக "ரப்பிஸ்ற்" ஆச்சிரமங்களை தரிசிக்கவும் வாழ்க்கை முறைகளை அவதானிக்கவும் நேரடி வாய்ப்பு பெற்ற நிறுவுனர் மட அடைப்பு வாழ்வை நிறுவனர் மட அடைப்பு வாழ்வை விரும்பி வலியுறுத்தினார்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டாலும் ஏனையோருடன் போட்டியிடுவதை தந்தை தோமஸ் விரும்பவில்லை. செபமாலைக் கன்னியர் வாழ்க்கை முறைக்கு அழைத்தல்களை ஊக்குவிக்கும் முயற்சி களிலும் கூட மட அடைப்புக்குள் வாழும் வாழ்க்கைச் சாட்சி யமே வலியுறுத்தப்பட்டது. அழைத்தல் கண்காட்சிகளில் காட்சிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் ஆயத்தம் செய்தாலும் மட அடைப்புக்குள் வாழும் துறவிகள் கண்காட்சிகளில் நேரடியாகப் பங்குபற்றுவதை முற்றாக விரும்பவில்லை. வெளிப்பணி புரியும் சகோதரிகளும் துணைச்சகோதரிகளும் முன்நின்று நடத்துவார்கள்



1987இல் செபமாலைச் சகோதரிகளுக்கான பொது ஒன்று கூடலின்போது "தம்மையே தந்தைக்குத் தொடர்பான அன்பின் பரிகாரப் பலியாக அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் இயேசுவிற்குச் சாட்சியம் கூறுவதே" தமது தனிவரம் அருங்கொடை என்று வார்த்தையில் வடித்தமை, சபையின் நோக்கத்தை குறிப்பிட்டுக்காட்டுவதாகவும், இந்த வாழ்வைவாழ்ந்து செயற்படுத்தியதன் விளைவா கவும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது என்பதே எனது உறுதியான அபிப்பிராயம் .

இவ்வாறு செபமாலைக்கன்னியர் சபை மறைபரப்பு பணியின் சக்திமிக்க ஆயுதமாக 'புளிக்காரமாக' நிறுவப்பட்டு வளர்கிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள ஒவ்வொரு மறை மாவட்டதிலும் செபமாலை மாதா துறவற குழுமம் ஒன்று நிறுவப்பட்டு அப்போஸ்தலப் பணிகளுக்கு ஆன்மீக வலிமைதரும் ஊற்றாக விளங்க வேண்டுமென்பது அருள்திரு தோமஸ் அடிகளாரின் இதய ஏக்கமும் குறிக்கோளும் ஆகும்.

குறிப்பு:
இந்தச் சிந்தனைகள் செபமாலைக்கன்னியரின் வேண்டுகோளுக்கிணங்க எந்தவொரு ஏடுகளின் துணையுமின்றி ஆரம்பத்தில் இருந்து 1992வரை செபமாலைத்தாசர் துறவிகளோடு (ஆண்கள், பெண்கள்) கொண்ட தொடர்பினால் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு எழுதப்பட்டது.

*அருள்திரு செ.ஆ. மைக்கல்சாமி அ.ம.தி.*

## ...மாலை தாசர் சபை
## ...ரஸ்ரர் பேசுகிறார்

...கன்னியர் சபையின் பொன் விழா
...ளைப் பாராட்டுவதிலும் வாழ்த்துவதி
...யாகப் பெருமையடைகின்றேன். இவர்
...கால கடின வாழ்வை நினைத்துப் பார்க்
...கள் துன்பம் நிறைந்த ஒரு பாதையின்
...து வந்துள்ளார்கள்.
...ம் இவர்கள் நிறுவுனரின் நோக்கத்தை
...சொட்டாகப் பின்பற்றி வருகிறார்கள்.
...அனுபவங்கள் இவர்கள் வாழ்க்கை முறை
... குழப்பி இருந்தாலும் மனோதிடத்தோடு
...தை ஏற்றும் கொண்டுள்ளார்கள். இவர்
... வாழ்வைப் பிரமாணிக்கமாக நடாத்த
...கள், குருக்கள், துறவிகள், பொதுநிலை
...எது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.
...தங்கள் தியான வாழ்க்கை கட்டி எழுப்
...தல்கள் பெருகி நல்வளர்ச்சி காணவும்
...ழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

அருள்திரு. M. L. அலோசியஸ்
பெங்களூர், இந்தியா.

## நன்றிப்பாடல் நாம் பாடுவோம்

செய் என்று ஆணையிட்ட ஆயர் கியோமாருக்கு நன்றி
மெய்மைதனை கண்டுணர்ந்த வண. தோமசுக்கு நன்றி
கைகொடுத்த தவத் தாயார் ஜான்மேலிக்கு நன்றி

தந்தையாய் நின்ற ஆயர் எமிலியார்க்கு நன்றி
வளர வைத்த ஆயர் தியோகுப்பிள்ளைக்கு நன்றி
தாய் போல கனிந்த ஆயர் அன்ரனிக்கு நன்றி

கரிசனையில் கரைகாணா எம்மாயர் தோமசுக்கு நன்றி
வலுத்தூணாய் நின்ற மைக்கல்சாமி அடிகளுக்கு நன்றி
கொழுகொம்பாய் நின்ற தந்தை செல்வாவுக்கு நன்றி

தூக்கிவைக்கத் துடித்த அல்பீனாவுக்கு நன்றி
தலைமையினை முதல் ஏற்ற பேனாட் தாய்க்கு நன்றி
தாங்கி நிற்கும் உரம்கொண்ட பப்ரிஸ்ட் தாய்க்கு நன்றி

உறுதுணையாய் இருந்துவரும் அமதிகளுக்கு நன்றி
தாம் மடிந்து சபை வளர்த்த மூத்தோருக்கு நன்றி
தம்மவரை சபைக்கீர்ந்த பெற்றோருக்கு நன்றி

உரிமைகொள் சோதரராம் செபமாலை தாசருக்கு நன்றி
உதவி பல புரியும் நல் உபகாரிகட்கு நன்றி

சேவை தரும் மறைவட்ட குருக்களுக்கு நன்றி
சீர் பாதை காட்டும் ஆன்ம நெறி ஊக்குனருக்கு நன்றி
சோராது சேவை புரி கன்னியருக்கு நன்றி

## செபமாலைக் கன்னியர் சபையின் செப அப்போஸ்தலத்துவம்



இலங்கை மண்ணில் இறைபணியாற்றும் பல்வேறு துறவற சபைகளில் பெரும்பாலானவைகள் பிறநாடுகளில் இருந்து வந்தவைகளே. ஆனால் செபமாலை மாதா துறவறசபை இம்மண்ணின் மைந்தனும் அமல மரித்தியாகிகள் சபைக் குருவுமான வண பி. ஏ தோமஸ் அடிகளால் யாழ் மண்ணில் நிறுவப்பட்டதுடன் இம்மண்ணின் புதல்வியரே அங்கத்தவர்களாகவும் ஆரம்பிக்கப் பட்ட சபையாகவும் இருப்பது இம்மண்ணிற்குப் பெருமை தருவதாகும்.

இச்சபை தமது 50 ஆண்டு பொன்விழாவைக்காணும் இத் தருணத்தில் இதை நிறுவுவதற்குரிய நோக்கத்தை அன்றைய காலகட்டத்தில் நிலவிய தேவைகளை மீள் பரிசோதனை செய்வது நன்மை பயக்கும் என எண்ணுகிறேன். அன்று எம் மண்ணிற்கு சிறப்பாக இலங்கை இந்திய நாடுகளுக்கு அநேக இறைபரப்பாளர்கள் வந்து அளப்பரிய சேவைகள் புரிந்தும் எதிர்பார்த்த பயன் கிடைக்காததும், இவர்கள் பணி உரிய பயன்கொடுக்க செப தபத்தால் உறுதுணையாக இருந்து – தவ வேண்டிய தேவையும், அதே காலப்பகுதியில் பரிசுத்த தந்தை 11ம் பத்திநாதர் தூய ஆவியால் தூண்டப்பட்ட வேத போதக நாடுகளில் விசுவாசம் பரம்ப மக்கள் மனந்திரும்ப செபதபம் புரியும் கடைசித்தியான துறவற சபைகளை நிறுவ கவனம் செலுத்தும்படி ஆயர்களுக்கு அறைகூவல் விடுத்தல். மரியன்னையும் தாய்குரிய கரிசனையுடன் லூர்து நகரிலும் பத்திமா பதியிலும்,பாவிகள் மனந்திரும்ப செபதபம் செய்யுங்கள், செபமாலை செபியுங்கள் எனக் கேட்டுக் கொண்டதும் இவ்வாறான சமகால நிகழ்வுகளின் செய்திக்குப் பதிலிறுக்கும் முயற்சியாக நிறுவப்பட்டது மான செபமாலை மாதா துறவற சபைகள். 1928ம் ஆண்டு ஆண்களுக்கான சபையும், நீண்ட 20 ஆண்டு காலமாக எடுக்கப்பட்ட பெருமுயற்சிகளின் பயனாக 1948 ஆண்டு செபமாலைக் கன்னியர் சபையும் உதயமாகியது.

தொடர்பான செபமும், மனமுவந்தேற்கும் தபமும் இறை ஒன்றிப்புக்குதவியான மௌனமும், அதிக சமூகத்தொடர்பற்ற மறைந்த வாழ்வு நசரேத்தில் திருக்குடும்பம் வாழ்ந்த வாழ்வைப் பிரதிபலிக்கும் எளிமையானதும், நம்முடைய வாழ்க்கைத் தேவைகளை நாமே நிறைவு செய்யும் உழைப்பும், எந்தவித பாகுபாடோ, ஏற்றத் தாழ்வோ அற்ற சமத்துவம் பேணும் சகோதரத்துவ குழுமவாழ்வும் செபமாலைக் கன்னியருக்குரிய வாழ்வாகும்.

நம் சபையின் மடங்கள் ஒவ்வொரு மறை மாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும் என்பதும் இரவு பகல் தொடர்ந்து இடைவிடாது நற்கருணைநாதர் முன் பரிந்துரைத்து அந்த மறை ஆயர், குருக்கள், துறவிகள் மறைபரப்பாளர்கள் பொதுநிலையினர் ஆக்கமும் ஊக்கமும் சக்தியும் அருளும் பெற்று தம் பணிகளைப் பயனுள்ளவைகளாக செய்ய உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதும் சிறப்பாக இறைவனை மறந்து மறுத்து வாழ்வோருக்காக நாம் அவரை அன்பு செய்து ஆராதன்ன புரிந்து வாழ வேண்டுமென்பது எம் சபை நிறுவினருடைய விருப்பமாகும். தற்போது இந்தியாவில் 6 மறை மாவட்டங் களில் 7 மடங்களும், இலங்கையில் 5 மறைமாவட்டங்களில் 7 மடங்களும் நிறுவப்பட்டள்ளன. கடந்த 10. ஆண்டுகளாக யுத்த அனர்த்தங்களினால் எம் தாய் மடத்தையும் சபையின் பிரதான இல்லமும் உருவாக்க இல்லமுமாகிய அமலிவனத்தையும் இழந்த நிலைய பல இடம்பெயர்வுகளுக்கும் இழப்புக்களுக்கும், உள்ளாக்கப்பட்டதுடன் புதிய அங்கத்தினருக்கும் பயிற்சி கொடுக்க இடவசதி இல்லாத காரணத்தால் அவர்களை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதும் அங்கத்தினர் தொகை குறைவாக இருப்பதால் ஏனைய மறை மாவட்டங்களுக்கு எம் சபை பரவ முடியாமல் இருப்பதற்குக் காரணங்களாகும். இவை சபையின் வாழ்வில் பின்னடைவும் வேதனைக்குரிய நிகழ்வுகளுமாகும்.

ஆயினும் அன்புள்ள தந்தையாகிய இறைவன் தமது தெய்வீக ஞானத்தால் நம் மக்கள் படும் அவலங்களையும் அலைச்சல்களையும் நாமும் கண்டுணர்ந்து அவர்களுடைய உணர்வுகளிலே பங்கு கொண்டு நம் பரிந்தரைக்கும் பணியைப் பலனுள்ளதாக ஆற்றவே இத்தகைய இடம்பெயர்வுகளையும் இழப்புக்களையும் நம் வாழ்வில் அனுமதித்தார் என நினைக்கிறேன். நம் சபையின் 50 ஆண்டு கால அனுபவத்தில் இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட அனுபவங்கள் முக்கிய நிகழ்வுகளாகின்றன.

பல இடங்களுக்கு அலைந்து திரிந்தாலும் பல அவலங்களை சந்தித்தலும் மீண்டும் உருவாக்க இல்லமாகிய அமலிவனத்தில் குடியேறி இந்த 50வது ஆண்டை நமது இல்லம் ஒன்றில் கொண்டாட அருள்கூர்ந்த இறைவனுக்கு இணைந்த இதயத்தினராய் நன்றி கூறுகிறோம். நல்ல தந்தையாகிய இறைவன் நம்மை ஆசீர்வதித்து எம் சபை வளர்ச்சிப்பாதையில் வீறுநடைபோடுவதாக.

*சகோ. மேரி யோண் பப்ரீஸ்ட்*
*(அதி சிரேஷ்ட தாயார்)*



# விடுதலைப் பயணத்தில் 04
# இஸ்ராயேலரும் ஈழத்தமிழரும்

அருள்சகோ. பா.பி. இராஜசிங்கம்

இந்நிலை எல்லாப் பிரதேசங்களிலும் நடந்தபோதிலும் 1995 ஒக்டோபர் 30ஆம் திகதி இரவு, தமிழ் மக்களின் வரலாற்றில் மறக்க முடியாத ஒரு பயங்கர இரவு! அது மக்கள் இலட்சக் கணக்கில் வலிகாமத்தைவிட்டு மனம் குழம்பிய நிலையில் செய்வதறியாது அழுது புலம்பிக் கொண்டு வெளியேறிய இரவு. கால்நடையாகவே எல்லோரும் பயணத்தை மேற்கொண்டனர். எல்லோரும் தமது உடமைகளை தலைச்சுமையாகவும், வண்டிகளிலும் கொண்டு சென்றனர். அவர்களது வளர்ப்புப் பிராணிகளும் அவர்களோடு கூடச் சென்றன.

### விடுதலைப்பயணத்தின் செங்கடலும், கிளாலிக்கடலும்

இஸ்ராயேல் மக்கள் பயணத்தில் செங்கடல் அவர்களது பயணத்துக்குத் தடையாய் அமைந்து நின்றது. இறைவனின் துணையோடு அவர்கள் செங்கடலைக் கடந்து பாரவோனின் படைகளிடம் இருந்து தப்பிச் சென்றனர்.

சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையினால் வலிகாமத்திலிருந்து வெளியேறிய மக்கள் பலர் அவசர அவசரமாக கிளாலிக் கடலினூடாக வன்னிப் பெருநிலப்பரப்புக்குப் பாதுகாப்புத் தேடி ஓடினார்கள். இக் கிளாலிக் கடலில்த்தான் பல அப்பாவித்தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் செங்குருதி கடலிலே கலந்ததினால் தமிழர்களாகிய எமக்கு இது ஒரு செங்கடலே.

பெரும்பாலானோர் வட மராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தங்கிவிட்டனர். ஆனால் அவர்களுக்கும் குறுகிய காலத்தில் பெரும் நெருக்கடி காத்திருந்தது. இரண்டாம் – மூன்றாம் சூரிய கதிர் இராணுவ நடவடிக்கைகள் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் ஆரம்பிக்கப்பட்டபோது மக்கள் தமக்குப் பாதுகாப்புத் தேடி வன்னிப் பெரு நிலப்பரப்பைத் தேடி நகர்ந்து கிளாலிக் கடலைக் கடப்பதற்கு கரையில் காத்திருந்தபோது இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

இன்று அவர்கள் தமது சொந்த வீடுகளில் வாழ்ந்தாலும், இராணுவக் கட்டுப்பாட்டில் பயத்துடன் தமது உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் சிறை வாழ்வு வாழ்கின்றனர்.

### விடுதலைப்பயணத்தில் விசுவாசம் தந்த ஆறுதல்

தமிழர்கள் பல சமயக் கோட்பாட்டை நம்புகின்ற மக்கள். நாம் ஒரு கத்தோலிக்கர் என்ற மட்டில் அன்று இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய இறைவன் இன்று எமது தமிழ் மக்களையும் வழிநடத்தி வருகின்றார் என நம்புகின்றோம்.

ஆண்டவர் பகலில் அவர்களை வழிநடத்த மேகத் தூணிலும் இரவில் வழிகாட்ட நெருப்புத் தூணிலும் இருந்தார் (வி.ப.13:21). இதே போன்று தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் இறை பராமரிப்பு அவர்களோடு இருந்தது. பருவ மழை பெய்ய வேண்டிய காலப் பகுதியில் மழை வீழ்ச்சி குறைந்து பூமி வரண்டு காணப்பட்டது. 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி பகல் வேளையில் கடும் வெயிலாக இருந்தது.

அன்று மாலை மக்கள் பெரும் திரளாக வலிகாமத்தை விட்டு வெளியேறினர். அன்றிரவே கருமேங்கள் படர்ந்தன. மழை சிறிது சிறிதாகப் பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து ஓரிருநாட்களாக அவர்கள் வெயிலில் இருந்து பாதுகாக்கப்பட்டார்கள். தண்ணீர் தட்டுப்பாட்டினால் பலர் மழை நீரைக் குடித்து ஆறுதல் அடைந்தனர்.

### விடுதலைப்பயணத்தின் அழிவுகளும், அவல மரணங்களும்

இஸ்ராயேல் மக்களினதும் தமிழ்மக்களினதும் விடுதலைப் பயணத்திலும், சிறை வாழ்விலும் பெரும் அழிவுகள் இடம் பெற்றன. எகிப்தியரின் போர் வீரர்கள், இலங்கை இராணுவத்தினர், விடுதலைப்போராளிகள், பொது மக்கள் ஆகியோர் கொல்லப்பட்டனர். இந்து, கிறிஸ்தவ, ஆலயங்கள், வீடுகள், பாடசாலைகள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன. மேலும் பல இளைஞர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர்.

இஸ்ராயேலர் பாலை நிலத்தில் பலவித நெருக்கடிகளைச் சந்தித்தனர். தமிழர்களும் பருவ மழை குறைந்ததன் காரணமாக அவர்கள் சென்ற இடமெல்லாம் தண்ணீர்ப் பிரச்சினையை எதிர் நோக்கினார்கள். புலம் பெயர்வின் காரணமாக மக்களுக்கு போதிய உணவு, உறைவிடம், மருத்துவம் போன்ற வசதிகள் கிடைக்கவில்லை. இவர்களின் பிரச்சினைகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் ஓரளவு நிவர்த்தி செய்ய முன்வந்தாலும் அவை யானைப் பசிக்கு சோளப்பொரி கொடுத்த மாதிரித்தான் இருந்தன. பெரும்பாலான மக்கள் காடுகளிலும், பாழ் வெளிகளிலும், இடிந்த மண்டபங்களிலும், ஆலயங்களிலும் – பாடசாலைகளிலும் தங்கினர். இவர்களுக்கு மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்ற எதுவுமே வழங்கப்படவில்லை. ஏன் மருத்துவ வசதிகூட இல்லாது அனேகர் மாண்டனர்.

### விடுதலைப்பயணத்தின் முறைப்பாடுகளும் முரண்பட்ட போக்குகளும்

இஸ்ராயேல் மக்களில் பலர் மோசேயுடன் பாலை நிலத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள் எகிப்து நாட்டின் வாழ்க்கை முறையினால் கவரப்பட்டிருந்தனர். அதே வேளை பாலை நிலத்தில் பல பிரச்சனைகளை எதிர் நோக்கிய இஸ்ராயேல் மக்களில் பலர் மோசேயுக்கு எதிராக தங்களுக்குள் விவாதித்தனர். பாலைநிலத்துக்கு வந்தவர்களில் பலர் கொள்ளிவாய்ப் பாம்புகளினால் மாண்டனர்.

தமிழர்களில் சிலர், இஸ்ராயேல் மக்களின் மன நிலையைக் கொண்டிருந்தனர். (தொடரும்)

# வாசகர் கருத்து



ஓர் அன்பான வேண்டுகோள்

ஐயா,

பாதுகாவலனில் ''நற்செய்தித் தூண்டுதல்'' என்னும் போட்டி வெளி வந்துகொண்டிருக்கிறது. இதுவரை 4 போட்டிகள் வெளிவந்து விட்டன. இறுதியாக வந்த போட்டியில் காவலனை அனுப்பும்படி குறிப்பிட்டிருந்தீர்கள்.

''காவலன்'' பத்திரிகையானது ஏனைய பத்திரிகையைப் போலன்றி பத்திரப்படுத்தி வைக்கப்பட வேண்டியதொன்றாகும். அதைக் (போட்டி) கத்தரிப்பதால், மறுபக்கத்தில் உள்ள கட்டுரையையோ, ஆக்கத்தையோ மீண்டும் என்றாவது ஒருநாள் வாசித்துப்பார்க்க முடியாது. எனவே தயவுசெய்து கத்தரித்து அனுப்பும் முறையை கட்டாயமாக்க வேண்டாம் என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்றும் காவலன் அபிமானி
*A.M. மஞ்சரிக்கா*

> நீங்கள் கூறுவதை ஏற்றுக்கொள்கிறோம். இப்போட்டியில் பங்குபற்றும் பலர் தமது பெயர் விபரங்களைத் தெளிவாக எழுதாதபடியால் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். எனவேதான் பத்திரிகையில் விலாசத்தைப் போட்டு வெட்டி அனுப்பும்படி போட்டோம். பத்திகையை வெட்டி அனுப்ப வேண்டிய கட்டாயம் இல்லை. தயவு செய்து பெயர் விலாசத்தை தெளிவாக எழுதவும். (ஆ-ர்)

வேதாகம அறிவை வளர்த்துக்கொள்வதற்கு நற்செய்தித் தூண்டுதல் போட்டி மிகவும் உதவியாக இருக்கிறது. தவறாமல் இப்படிப்பட்ட பல போட்டிகளை வைக்கவும் என்று பாதுகாவலன் ஆசிரியரைக் கேட்டுக்கொள்கிறோம். பாராட்டுக்கள் நன்றிகள்.

*மரிய சுகந்தினி இம்மனுவல்*
*யாழ் நாவற்குழி ம.வி. நாவற்குழி*

நற்செய்தித் தூண்டுதல் போட்டி எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. வேதாகமத்தை படிக்க முடிகிறது. ஆசிரியருக்கு எமது பாராட்டுக்கள்.

*இ.மரிய சுவர்ணா*
*புனித அந்தோனியார் கோவில்*
*நாவற்குழி. கைதடி*

# பல்கலைக்கழக மாணவரின் தியான அனுபவம்

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஞான ஒடுக்கம் இயக்குனர் ஆர். சூசைநாதன் அடிகளாரினால் ஒழுங்கு செய்யப்பட்டு பண்டத்தரிப்பு தியானஇல்லத்தில் 12.06.98–14.06.98 வரை நடைபெற்றது. இதில் 45 மாணவ மாணவியர் பங்குபற்றினர்.

தியான நாட்களை அருள்தந்தை ஜீவாபோல், அருள்தந்தை ரவிச்சந்திரன் ஆகியோர் நெறிப்படுத்தினர். தொடக்க நிகழ்வாக ஜீவாபோல் அடிகளார் ''நான் கதவண்டை நின்று தட்டுகிறேன் ஒருவன் எனது குரலைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனது இல்லத்தில் நுழைந்து விருந்துண்பேன். நானும் அவனும் ஒன்றாய் விருந்துண்போம்''. (திருவெளி. 3:20) என்ற இறைவார்த்தையை முன்வைத்து தியானத்தின் உட்பொருளை உணரவைத்தார்.

மறுநாள் காலை தியானத்தில் ஐம்புலங்களையும் ஒருமுகப்படுத்தி உடலும் உள்ளமும் இணைந்து அமைதியில் இயேசுவின் பதம் அமர்ந்து இறை பிரசன்னத்தை உணரவைத்தார். இன்றைய இளைஞர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ற தலைப்பில் அருள்தந்தை. ரவிச்சந்திரனின் உரை இடம்பெற்றது. தனது இளமைக் கால வாழ்வின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு பிரச்சனைக்கான காரணங்களையும் (தனிமை, தாழ்வு மனப்பான்மை, தீர்மானம் எடுத்தல்) அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைத்தார். மாணவரிடம் இருந்து எழுந்த சந்தேகங்கள், வினாக்களிற்கு தெளிவான விளக்கம் அளித்தார்.

அருள்தந்தை ஜீவாபோல் சுய மதிப்பீடு சுய ஏற்பு பற்றி கருத்துரை வழங்கினார். சுய ஏற்புடைய ஒருவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றிக் கூறியமை கூடியிருந்த ஒவ்வொருவரும் தம்மைத் தாமே ஆராய்ந்து பார்த்து எனது வாழ்வின் உண்மை நிலை என்ன? நான் யார்? என்ற கேள்விகளுக்கு விடை காண, சிந்திக்கத் தூண்டியது. இதையடுத்து சுய ஏற்பு பற்றிய கற்பனை கதை ஒன்றை கூறி குழு ஆய்விற்கு விடப்பட்டது. குழுக்கள் மத்தியில் ஐக்கியமான உறவும், வாழ்க்கை அனுபவத்தோடு எடுத்துக்காட்டி பதில்களும் வெளிக்கொணரப்பட்டன. மாலை வழிபாட்டில் கிறீஸ்து எம் ஒவ்வொருவருக்கும் யார்? என்பதை தியானித்து நன்றி கூறி செபிக்க அழைக்கப்பட்டோம்.

3ம் நாள் காலை இயற்கையோடு ஒன்றித்து இறைவனை புகழ ஆழமான தியானத்தை அருள்தந்தை அவர்கள் ஒழுங்கமைத்தார். இயற்கையான அழகுள்ள காட்சிகள் மத்தியில் எம் மனங்களை அழைத்து சென்றார். இயற்கையை உற்று நோக்கிய எம் பார்வையால் தொட்டு, அனுபவித்து அரிய பல செய்திகளையும் உணரவைத்தார். தொடர்ந்து காலை உரையில் நான் வாழ எனக்கு வேண்டியது என்ன? என்ற கேள்வியில் உறவும் தொடர்பும் பற்றிக் கூறினார். கதை ஒன்றினை கூறி அதில் இருந்து கேள்விகள் அளிக்கப்பட்டு மீண்டும் குழு ஆய்வுக்கு விடப்பட்டது. மீண்டும் விடை தேடலில் உறவு பற்றிய ஆழமான கருத்துக்கள் மாணவரிடையே வெளிக்கொணரப்பட்டதால் பயனுள்ள பல விடயங்கள் பகிரப்பட்டன. பல்கலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் எதிர்பார்ப்புக்கள், உறவுகள் தோல்வி காண்பதற்கான காரணங்கள், சமுதாயத்தில் நிகழும் முக மூடி வாழ்வு (சுயமறுப்பு) என்பனபற்றி விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. முடிவாக, கிறிஸ்துவின் உறவில் எமது உறவு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை கிறிஸ்துவின் வாழ்வில் வெளிப்படையாகக் காணும் அம்சங்களுடன் எடுத்துக் காட்டி விளக்கம் அளிக்கப்பட்டது.

கிறிஸ்ரினா

பாதுகாவலன்



# இளைஞர் மன்றச் செய்திகள்

தொகுப்பு: கி. செல்மர் எமில்

* குருநகர் புனித யாகப்பர் ஆலய சமய, சமூக மகளிர் மன்றம் தனது 9வது வருட நிறைவு தினத்தை கடந்த 12-07-98 இல், பங்குத்தந்தை அருள்திரு பொனிபஸ் தலைமையில் யாகப்பர் மண்டபத்தில் கொண்டாடியது. கலை நிகழ்ச்சிகளாக பட்டிமன்றம், நாடகம், கவிதை, வாசிப்பு என்பன இடம் பெற்றன.

* யாழ். புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர், தற்போது எமது சமூகத்தை பெருமளவில் சீரழித்துக் கொண்டிருக்கும் மதுபாவனை அதிகரிப்பு, போதைவஸ்து பாவனை, கசிப்பு உற்பத்தி என்பவற்றை தடுத்து எமது சமூகத்தை ஆரோக்கிய முள்ளதாக மாற்ற செயற்படவுள்ளார்கள். இதன் முதற்கட்டமாக, இவற்றின் பாவனையாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஏனைய மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டி போட்டி ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். பங்கு மட்டத்திலும், பங்கிலுள்ள பாடசாலைகள் மத்தியிலும் நடாத்தப்படும் இப்போட்டியில் அனைவரையும் ஆர்வத்துடன் பங்கு பற்றுமாறு இ.உ. இயக்கத்தினர் கேட்டுக்கொள்கிறார்கள், இவை தொடர்பான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

* இணைப்பங்குகளான பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய, கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர் ஒன்றியத்தினர் தமது மாதாந்த தொடர் செயற்பாடாக போயாதினக் கருத்தரங்கை ஆரம்பித்துள்ளார். முதலாவது போயாதினக் கருத்தரங்கு கடந்த 07.08.1998 அன்று காலையில், புனித அன்னாள் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் 'இளைஞர்களும்–இன்றைய சமூகப் போக்குகளும்' என்னும் பொருளில் யாழ், பல்கலைக்கழக சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளரான திரு. G. M. செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் கருத்துரை வழங்கினார். கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இப்புதிய பகுதி, எமது யாழ். மறை மாவட்டத்தில் பங்குகளில் இயங்கும் இளைஞர் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக பாதுகாவலனில் ஆரம்பமாகின்றது. நீங்களும் உங்கள் அமைப் புக்களின் செயற்பாடுகளை பங்குத் தந்தையின் சிபார்சு டன் அனுப்பிவைத்தால் பிரசுரிப்போம். (ஆ–ர்)

## யாழ் றக்கா வீதி புனித திரேசாள் ஆலயத் திருவிழா

யாழ் றக்கா வீதியில் அமைந்துள்ள புனிததிரேசாள் ஆலய வருடாந்த திருவிழா 1998.09.21 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 1998.09.26 ஆம் திகதி, சனிக்கிழமை மாலை நற்கருணை விழாவும் 1998.09.27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் நடைபெறும்.

நவநாள் அருளுரைகளை அருள்திரு செலஸ்ரின் அ.ம.தி. அவர்கள் வழங்குவார்.

* * * * *

**பேராயர் மார்சல்லோ . . .**
(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

யகத் தலைவராக உள்ளார். அவரின் கீழ் பணிபுரியும் நான் இங்கு வருவதைக் கேள்வியுற்றதும், 'யாழ்நகர் மக்களுக்கு என் அன்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து விடுங்கள். பாதுகாவலன் பத்திரியையில் என்னைப் பற்றி வந்த செய்திகளையும், படங்களையும் நான் இங்கே பார்த்தேன். பாதுகாவலன் பத்திரிகையின் மூலமாக யாழ் ஆயர், குருக்கள், துறவிகள் இறை மக்களுக்கு எனது ஆசிரையும், செபங்களையும் தெரிவியுங்கள்' என்று கூறினார்" என அவர் தெரிவித்தார்.

* * * * *

**யாழ் அடைக்கல . . .**
(8ஆம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து திருச்சுரூபப் பவனியும் ஆசீரும் இடம் பெறும். சிறப்பு நிகழ்வாக 5 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு பெற்றோருக்கும், 6 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சிறியோருக்கும், 6 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இளையோருக்கும் கருத்தரங்குகள் இடம் பெறும். பங்குத்தந்தை G.V. பிலேந்திரன் அடிகள் அன்னையின் அடைக்கலமும் ஆசீரும் பெற அனைவரையும் அன்போடு அழைகின்றார்.

தகவல்: L.R.S

## ST. PATRICK'S COLLEGE JAFFNA
### அனுமதி விண்ணப்பம் – 1999

❖ விண்ணப்பப் பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா 175/- 01.09.98 தொடக்கம் 22.9.98 வரை பாடசாலை நாட்களில் காலை 9.30 – பி.ப 1.30 வரை கல்லூரி காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

❖ நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 25.09.98ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9.30 – பி.ப.12.30 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

❖ முதலாம் ஆண்டு:– 01.02.93 – 31.01.94 (இரு திகதிகளும் உட்பட) பிறந்திருக்க வேண்டும்.

❖ அனுமதிப்பரீட்சை:– 03.10.98 (சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமூகம் தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் (காலை) |
|---|---|---|
| ஆண்டு 1 (இல.01–100) | 8.30 | 9.00 |
| ஆண்டு 1 (இல.101–250) | 11.00 | 11.30 |
| ஏனைய வகுப்புக்கள் | 8.30 | 9.00 |

❖ 6ம்,9ம் ஆண்டுகளுக்கான அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ் ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

❖ தபால்மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

❖ சித்தியெய்திய தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படும்.

கல்லூரி அதிபர்

A/90/98

## இடம்பெயர்வு துன்ப . . .
(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

நேரடியாக அறிந்து சென்றவர். அடிகளார் அண்மையில் யாழ் நகருக்கு வந்தது இவரது ஐந்தாவது வருகையாகும். 1986,1989, 1992,1995 ஆகிய ஆண்டுகளிலும் இதற்கு முன்னர் இவர் நான்கு தடவைகள் யாழ் நகருக்கு வந்து சென்றுள்ளார். 1992இல் கிளாலிக் கடலூடாகப் பிரயாணம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலும் என்ன நடந்தாலும் எல்லாவற்றையும் தாங்கிக்கொள்வோம் என்ற மனத்திடத்துடன் கிளாலிக் கடலூடாகத் துன்பம் மிகுந்த பயணத்தை மேற்கொண்டு யாழ்நகர் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் அண்மையில் யாழ் நகருக்கு வந்தபோது இவரின் யாழ் நகருக்கான விஜயம் பற்றி பாதுகாவலன் பத்திரிகை சார்பாகக் கேட்டபோதே அவர் மேற்படி கருத்துத் தெரிவித்தார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாரிய இடம்பெயர்வின் பின்னர் தம் இடங்களுக்குத் திரும்பிய எமது சபையினரையும், தமிழ் மக்களையும் நேரடியாகச் சந்திக்கும் நோக்குடனேயே நான் யாழ்நகருக்கு வந்தேன். இடம்பெயர்வு துன்ப அனுபவங்களின் பின்னர் யாழ் மக்களுடைய விசுவாசம் தளர்ந்து போகவில்லை. மாறாக இன்னும் ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

அருள் ஆச்சிரமத்திற்கு நிறைந்துவருகின்ற மக்கள் தொகையையும் காணுகின்றபோது இது தெளிவாகிறது. ஒரசிலரோடு பேச்சுக்கொடுத்தபோது எனது மேற்படி கருத்தை உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது என்றார்.

சபையின் வளர்ச்சி பற்றியும், தேவ அழைத்தல் பற்றியும் கேட்டபோது இலங்கையிலும் இந்தியாவிலும் 12 மடங்களில் 27 குருக்கள் இப்போது பணியாற்றுகிறார்கள். இவற்றில் இலங்கையில் மாத்திரம் யாழ், நீர்கொழும்பு, வவுனியா, கண்டி ஆகிய 4 இடங்களில் 10 குருக்கள் பணியாற்றுகின்றார்கள்.

தியானம் மேற்கொள்ள விரும்புவோர் குறிப்பாக குருக்கள் வந்து தியானம் செய்து செல்லத்தக்கதாக தியான இல்லம் ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம். தேவ அழைத்தல் ஊக்குவிப்பாளர்களாக கொட்வின் அடிகளையும், பிரான்சிஸ் அடிகளையும் நியமித்திருக்கின்றோம். இவர்களது உழைப்பில் தேவ அழைத்தல்கள் பெருகும் என நம்புகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**செபமாலைக் கன்னி. . .**
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுமாறு அருள்சகோதரி மேரி மில்றட் தமது சபை சார்பாக அழைப்பு விடுத்துள்ளார்.

1948இல் B.A.தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைக் கன்னியர் சபையினர் இவ் ஆண்டு தமது பொன் விழாவைக் கொண்டாடுகின்றனர்.

கடந்த கால இடம் பெயர்வுகளாலும், இடர்களாலும் தம் தோலகட்டி அமலிவன மடத்து வாழ்க்கை குழம்பிப் போனபோதும் தூர இடங்களுக்கு ஓடித் திரிந்து அலைந்தபோதும் அனைத்தையும் இறை சித்தம் என ஏற்று வாழும் இவர்கள் வாழ்வில் இறைவனின் ஆசீர் நிறைவாகப் பொழியப்பட பாதுகாவலன் **அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.**


## ஓர் ஆண்டு நினைவு நாள்



திருமதி சவிரிமுத்து மேரி திரேசா
(அரசம்மா)

அன்னைமடியில்
12.06.1926

ஆண்டவன் அடியில்
15.09.1997

எங்கள் குடும்பத்தின்
தீபமாகவும்
அன்புத் தெய்வமாகவும்
விளங்கிய
அம்மாவே தீரவில்லை
எம் கவலை அன்பு முகம்
பார்க்காமல்
அன்பு மொழி கேட்காமல்
ஆறாது அழுதாலும்
தீராதம்மாவே
தங்கள் ஆத்மா
சாந்தியடைய
இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

46–புதுவீதி
கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்

A/89/98


**ஆண்டவர் விரும்புவதைக் கண்டுபிடிப்பவன் யார்? ஞான. 9:13**

## அகதிகள் நலனில் பிரான்சு ஆயர்கள்

அரசியல் தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்களுக்கு உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படும் வரை தற்காலிக வதிவிடவசதிகளை பிரான்சு ஆயர்கள் மேற்கொண்டு வருவது தெரிந்ததே. அரசியல் யாப்பில் அகதிகள் நலன்கருதி மாற்றங்களை ஏற்படுத்துமாறு அரசை ஆயர்ஒன்றியம் அண்மையில் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஏப்ரல் 7ல் ஆயர்ஒன்றியம் வரைந்த பொதுமடலில் வதிவிட அனுமதியற்ற அகதிகள் ஆலயங்களை நோக்கி வருவதற்கான காரணம் பற்றி விளக்கியுள்ளார்கள். பாதுகாப்புப் படையினரின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கடந்த ஏப்ரல் 4ல் "பொபிக்னி (Bobigny) என்ற இடத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் 200 அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளார்கள். பெரும்பான்மையான அகதிகள் ஆபிரிக்க ஆசிய நாடுகளிலிருந்து அரசியல் நெருக்கடி காரணமாகவும் ஏழ்மை காரணமாகவும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்கிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ள ஆயர்கள்ஒன்றியம் மேலும் அகதிகளின் உரிமைகளில் மாற்றங்களைக் கொண்டு வரும்படியும் அகதிகள் அங்கீகாரம் பெறும்வரை நாட்டில் தங்கியிருக்கக்கூடிய காலஎல்லையை நீடிக்கும்படியும் அரசைக் கேட்டுள்ளது.

. நன்றி 'தொருவானம்'

## யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திருவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்கதும், யாழ் நகரின் மத்தியில் எழில் மிகு தோற்றத்துடன் மிளிர்ந்து தன்னைத்தேடி வரும் மக்களுக்கு அபயமளித்து காத்து வரும் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திருவிழாவானது ஆவணி மாதம் 30 ஆம் திகதி மாலை 5.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாட்கள் தினமும் 5.30 மணிக்கு நடைபெற்று வருகிறது. M.V.E. இரவிச்சந்திரன் அடிகள் "பலவீனத்தில் பலமாய்" "துயரில் துணையாய்" "பயத்தில் திடமாய்" "வளர்ச்சியில் வழியாய்" "இளமையில் புயலாய்" "உறவில் மகிழ்வாய்" "மூப்பில் காப்பாய்" "பிரிவினையில் புது உறவாய்" "பலியில் நிறைவாய்" "அடைக்கல அன்னையாய்" என்ற கருப்பொருட்களில் மறையுரைகளை ஆற்றி மக்களை நெறிப்படுத்துகிறார்.

நற்கருணை விழா 07.09.98 மாலை 5.00 மணிக்கும், திருவிழா முதல் திருப்பலி 08.09.98 காலை 6.00 மணிக்கும் விழாத்திருப்பலி காலை 7.00 மணிக்கும் அதைத்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# இலங்கையை அடிமைத்தனமற்ற ஒரு சுதந்திர தேசமாகக் காணும் பாக்கியத்தை நாம் பெறவேண்டும்

★ பேரருள்திரு. நீக்கிலஸ் மாக்கஸ் பெர்ணாண்டோ ★

1998ம் ஆண்டு தேவத்தையில் நடைபெற்ற சிறுவர்தின பொன்விழாவை ஒட்டி வெளியிடப்பட்ட மலரிலே, பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழிலும், சிங்களத்திலும் கலந்து வெளியிடப்பட்ட மேற்படி மலரில் பேராயர் தொடர்ந்து தெரிவிக்கும்போது 1942ஆம் ஆண்டு மேன்மை தங்கிய ஆயர் மேசோன் சிறுவர்களை ஒன்று கூட்டிச் சிறப்பித்தார். அன்று தொட்டு இன்று வரை கடந்த 50 ஆண்டு காலமாக மாணவ மாணவியர்கள் இந்த வரலாற்று மிக்க பூமிக்கு வந்து சேருகிறார்கள்.

அன்னை மேரியின் பாரிந்துரையினால் எமது இலங்கையை அடிமைத்தனமற்ற ஒரு சுதந்திரமான தேசமாக காணும் பாக்கியத்தைப் பெற்று, எல்லோரும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்று உங்கள் அனைவருக்கும் ஆசி கூறுகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

## அன்னை திரேசாவின் ஓராண்டு நிறைவு

தன்னுடைய வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்தவத்திற்குச் சான்று பகர்ந்து "வாழும் புனிதை" என்று வர்ணிக்கப்பட்ட அன்னை திரேசா புரட்டாதி 05–1997, இல் இறை பதம் அடைந்து ஓராண்டு பூர்த்தியாகின்றது.

"அன்னை திரேசா முழு உலகிற்கும் கிறிஸ்தவததின் உயிர் வாழும் சாட்சியாகத் திகழ்கின்றாள்." என்று அன்னை வாழ்ந்த போதே கூறிய வார்த்தைகள் அன்னையின் இறப்பின் பின்னரும் அன்னையின் பணியைத் தொடர்வதில் – அன்னையின் பெயரில் பணிநிலையங்களை நிறுவுவதில் இன்றும் நிஜமாகிக் கொண்டிருக்கின்றன.

தொடர்வோம் அன்னையின் பணியை
பகர்வோம் கிறிஸ்தவ சாட்சியம்

## இளவாலை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியக் கூட்டம்

இளவாலை மறைக்கோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து கடந்த 07–08–98 அன்று மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயப் பணிமனையில் இளையோர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

அன்றைய நிகழ்வை இளவாலை மறைக்கோட்ட இளையோர் ஆணைக்குழுவிற்கு பொறுப்பாக அருள்திரு A.P.அன்ரனிப்பிள்ளை அவர்கள் இளையோர் ஒன்றியத்தின் அவசியத்தை எடுத்துரைத்து இக்கூட்டத்தை ஒழுங்கு செய்தார்.

இந்நிகழ்வின் யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருள்திரு S.J. இராஜ நாயகம் அவர்கள் சிறப்புரை வழங்கினார். அவர் தனது உரையில் சமூக விழிப்புணர்வு, இளையோரின் கல்வி விளையாட்டு என்பவை பற்றியும் ஏனைய துறைகளில் அவர்களின் பங்களிப்பைப் பற்றியும் எடுத்துரைத்தார்.
அதையடுத்து நிர்வாகத் தெரிவு நடைபெற்றது.

தலைவர் செல்வன் M. விமல்ராஜ்
செயலர் செல்வி M. விக்ரோறியா
பொருளாளர் செல்வி R. யூலியா
உபதலைவர் செல்வன் M. ஜோண் ராஜ்குமார்
உபசெயலாளர் செல்வன் S. ஜெயறூபன்
ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து இவ்வருடத்திற்கான செயல்பாட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன.

தகவல்: செல்வி – M– விக்ரோறியா

# சிறுவர்கள் இறைவனின் தனிப்பட்ட சிறப்பான அன்பிற்கு உரிமையுடைவர்கள்!

– கொழும்பு மறைமாவட்ட சிறுவர்தின பொன்விழா மலரில் தமிழ் பிரிவு இயக்குனர் அருள்திரு அகஸ்ரின் பெர்ணாண்டோ

கொழும்பு மறைமாவட்ட சிறுவர்தின பொன்விழா அண்மையில் தேவத்தையில் கொண்டாடப்பட்டது. அப்பொன்விழா நிகழ்வைச் சிறப்பிக்க வெளியிடப்பட்ட பொன்விழா மலரிலே தமிழ்ப் பிரிவு இயக்குனர் அருள் திரு அகஸ்ரின் பெர்ணாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தமது ஆசிச் செய்தியில் மனிதவாழ்க்கையில் கல்வியும், ஒழுக்கமும் இன்றியமையாத அம்சங்களாகும். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். ஆகவே சிறுவர்களாகிய உங்களுக்கு வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## கார்மேல் சபையின் மாகாணத் தலைவியாக மீண்டும் அருட்சகோதரி மேரி டிலேக்ரா

கார்மேல் சபையின் தலைவியாக அருள் சகோதரி மேரி டிலேக்ரா மீண்டும் மாகாணத் தலைவியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடந்த பொதுக்கூட்ட அமர்வின்போதே இத் தேர்வு நடைபெற்றது.

1995ம் ஆண்டு முதல் மேற்படி சபையின் மாகாணத் தலைவியாக இருந்த பின்னர் இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணத்தலைவி அருள் சகோதரி மேரி டிலேக்ரா அவர்களின் பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்கள்.

# பேராயர் மார்சல்லோ சாகோவின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்

- அருள்திரு. J. கமிலஸ் நிமலன் -

நற்செய்தி அறிவிப்புப் பணியகத்தில் பணிபுரியும் கமிலஸ் நிமலன் அடிகள் அண்மையில் யாழ் நகர் வந்திருந்தார். யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த இவர் தமது விடுமுறை காலத்தைக் கழிப்பதற்காகவும், இடம்பெயர்வின் பின் யாழ் நகரையும், மக்களையும், தரிசிப்பதற்காகவும் வந்தபோது பாதுகாவலன் யாழ் நகர் நிருபர் அவரைப் பேட்டி கண்டார்.

கமிலஸ் நிமலன் அடிகள் தமது நேர் காணலில் "எமக்கு ஒரு சிறிய விடுமுறையே கிடைக்கிறது. அக்காலத்தில் யாழ் நகர் வரவே பெரிதும் விரும்புகிறேன். 1995ஆம் ஆண்டு கிளாலி மூலம் யாழ் நகர் வந்தேன். 1996இல் வந்த போது யாழ் நகர் வரமுடியவில்லை. இடம் பெயர்வின் பின் யாழ் நகரையும், மக்களையும் பார்க்க பெரிதும் விரும்பியே இம் முறை வந்துள்ளேன்" என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது "அமலமரித் தியாகிகளின் சிரேஷ்டராக இருந்த பேராயராகிய மார்சல்லோ சாகோ ஆண்டகை இப்போது நற்செய்தி அறிவிப்புப் பணி

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## கொழும்பு புதுச்செட்டித்தெரு வியாகுல அன்னை ஆலயத்தில் "மோட்சபாதை"

மிக நீண்ட காலமாக கொழும்புப் பகுதி தமிழ் கத்தோலிக்க மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மோட்சபாதைப் புத்தகங்களை கொழும்பிலும் பெற்றுக்கொள்ள வழி செய்துள்ளோம்.

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் பத்தாம் பதிப்பாக அச்சிடப்பட்ட மோட்ச பாதைப் புத்தகங்களைக் கொழும்பு – 13, புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை ஆலயத்தில் ஆனந்த பெர்னாண்டோ பிள்ளை அடிகளாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விசேட கழிவுடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஆனந்த பெர்னாண்டோப்பிள்ளையிடம் தொடர்பு கொள்ளவும்.

கிளி–முல்லை மறைக்கோட்டத்தில் மோட்ச பாதையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மறைக்கோட்ட முதல்வர் P. இருதயதாஸ் அடிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

மன்னார் மறை மாவட்டத்தில் மோட்ச பாதையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மன்னார் மறைக் கல்வி நிலைய இயக்குனர் அன்ரனி டலிமா அடிகளாருடன் தொடர்பு கொள்ளவும்.

(ஆ–ர்)